

FB Postings Of Oct 2024

FB Postings Of R. Pattabiraman

pattabi raman 12/13/24 [Course title]

PATTABI's Postings FB Oct 2024

oct 2

டிராட்ஸ்கி மீது பொதுவாக நண்பர்களை வைத்துக்கொள்ளத்தெரியாது..தன்னை தலைமையாக ஏற்று வந்த factionயை தொடர்ந்து கட்டியாளத்தெரியவில்லை என்ற குற்றசாட்டுக்கள் உண்டு.

1902ல் லெனினை சந்தித்து பேசியிருந்தாலும் 1903-1917 காலங்களில் பெரும்பாலும் இரு பெரும் குழுக்களில் சிக்காமல் தனித்து பேசியும் எழுதியும் வந்தவர் டிராட்ஸ்கி. லெனினை பெரிதாக கொண்டாடவேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுக்காதவராக அவர் பயணித்தார்.

புரட்சி காலத்தில் லெனின் டிராட்ஸ்கி என இருவரும் ஒருவருக்கொருவர் தேவைப்பட்டனர். இணக்கமாகவும் சிறு வேறுபாடுகளுடன் நகர்ந்தனர். லெனின் ஆட்சி தலைமையில் அடுத்த நிலையில் டிராட்ஸ்கி என்ற நிலை இருந்தது. ஸ்டாலின் பொதுச்செயலர் ஆக்கப்பட்ட நிலையில் , லெனின் தனது இறுதி நாட்களில் அவரை இறக்கவேண்டும் என்ற செய்தியை அனுப்பினார். அது நிறைவேறவில்லை. லெனின் மறைவிற்குப்பின்னர் தன்னை லெனினிஸ்ட் ஆக டிராட்ஸ்கி காட்ட முயற்சித்தது ஏற்கப்படாமல் போனது. இதில் ஸ்டாலின் பெரும் வெற்றியைப் பெற்றார்.

டிராட்ஸ்கியிடம் ஏதோ ஒருவகையில் நெருக்கமாக இருந்தவர்கள் என அறியப்பட்டவர்கள் அனைவரும் ஸ்டாலின் ஆட்சியில் உழைப்பு முகாமில் சித்திரவதை மரணத்தை தழுவ நேர்ந்தது. ரடேக், பிரோபிரஜென்ஸ்கி, ரகோவ்ஸ்கி, செரெப்ரைகாவ், பைடகாவ், ஸ்மைல்கா என பல முக்கிய தோழர்கள் துப்பாக்கி குண்டுகளால் தொலைந்து போயினர். டிராட்ஸ்கியால் எவரையும் காப்பாற்ற முடியவில்லை.

டிராட்ஸ்கி சிகரெட் புகைத்து தள்ளுவார். லெனின் பிடிக்கமாட்டார். டிராட்ஸ்கியும் 1917க்குப் பின்னர் புகையை விட்டார். லெனின் முக்கிய பார்ட்டிகளில் மரியாதை நிமித்தம் கொஞ்சம் பீர் எடுத்துக்கொண்டு போய்விடுவார்.

நண்பர்கள் வற்புறுத்தலால் சில நேரம் டிராட்ஸ்கி இருப்பார். பலதோழர்கள் பார்ட்டி என்றால் எப்படி சந்தோஷிக்கவேண்டுமோ அப்படி நடந்துகொள்வர். புகை மண்டலம், உயர பாட்டில்கள் இடையில் கொச்சை பேச்சுக்கள் இருக்கும். டிராட்ஸ்கி ஆபாச பேச்சுக்கள் என்றால் முகம் சுளிப்பார். போல்ஷ்விக்குகள் சுப்பீரியர் என்றால் அந்த conscious இருக்கவேண்டும் என அத்தோழர்களை கண்டிப்பார். நதால்யாவுடன் பார்ட்டிக்கு செல்லும்போது இந்த ஆபாசங்களையெல்லாம் தாங்கமுடியவில்லை நேர விரயம் என்பார் டிராட்ஸ்கி.

டிராட்ஸ்கி சகோதரி ஓல்காவும் அவரது கணவர் முக்கிய தோழர் காம்னேவும் ஒரு நிகழ்விற்கு அழைத்திருந்தனர். ஓல்கா அந்நிகழ்வை பூர்ஷ்வாத்தனமாக நடத்துகிறாள் என டிராட்ஸ்கி கோபித்துக்கொண்டாராம்

லெனின் உடன் கிளம்பி diplomatic ஆக நடந்துகொள்வது போல இல்லாமல் நேரிடையாக விமர்சித்து அத்தோழர்களிடம் டிராட்ஸ்கி உறவை கெடுத்துக்கொள்வார். தேவைப்படுகிறார்கள் என்றால் அவர்களை சற்று நிதானமாக நடத்த அறிந்தவராக லெனின் இருந்தார். ஆனால் டிராட்ஸ்கி Self righteous ஆக எப்போதும் இருப்பார். தன் பேசும் திறன், எழுத்தாற்றல், வாதத்திறன் ஆகியவற்றையே அவர் தனது பலமாக நினைத்தார்.

ஒருமுறை 1926ல் அவருக்கு நெருக்கமாக இருந்த ஆந்த்ரே அந்த்ரீவ், பின்னால் ஸ்டாலின் புகாரினுக்கு நெருக்கமானவர், கூறினார். டிராட்ஸ்கி நீங்கள் ஏராளம் எழுதுகிறீர்கள் ஆனால் எவன் அவற்றை படிக்கிறான்.. அந்த்ரீவிடம் சிறு புன்னகை உதிர்த்துவிட்டு டிராட்ஸ்கி பதில் கூறாமல் இருந்து விடுகிறார்.

தோழர் Max Eastman பதிவு ஒன்றில் இப்படி டிராட்ஸ்கி பற்றிச் சொல்கிறார்.

He never boasts, he never speaks of himself or his achievements, he never monopolises his conversations. He gives his attention freely and wholly to anything that comes up..if I pay him a compliment, he says some little thing, ‘ I am glad’ , and then passes on another subject..

ஆனால் அடுத்தவரின் அறியாமையை முட்டாள்தனத்தை சகிக்காதவர் என்ற பெயரை மட்டுமல்லாமல் மிகவும் arrogant என்ற பெயரும் அவருக்கு கிடைத்தது. இப்படி தம் மீது ஒட்டப்படும் லேபிள்களை

துடைத்தெறியவேண்டும் என்ற எந்த முயற்சியும் அவரிடம் இல்லை என அவர் குறித்து அறிந்தவர்கள் சொல்லக்கேட்கிறோம்.

இந்திய சிறையில் லெனினை படித்த அளவு டிராட்ஸ்கியையும் பகத்சிங் படித்ததைப் பார்க்கிறோம். ஏராள இளைஞர்களை 1920- 1930 களில் ஈர்த்த அந்த டிராட்ஸ்கி வரலாற்றில் துயர நாயகன் ஆனார்..

oct 5 2024

பபானி பட்டாசார்யா (1906-88) புகழ் வாய்ந்த இலக்கிய எழுத்தாளர். ஏராள படைப்புகளை தந்துள்ளார். அவர் எழுதிய 'எழுத்தாளர் காந்தி'(Gandhi The Writer) என்கிற அற்புத பிரதியை வாசித்த வழி பபானி பற்றி கொஞ்சம் அறிந்தேன்.

வங்க மாகாணத்தில் பிறந்து பாட்னா, லண்டன் கல்வி சாலையில் பயணித்து, வாஷிங்டனில் இந்திய தூதரக பணியாளராக ஆரம்பத்தில் இருந்தவர் பட்டாசார்யா. பின்னர் கல்வித்துறைக்கு தன்னை அர்ப்பணித்தார். சியாட்டில் பல்கலையில் பல்லாண்டுகள் பணியாற்றினார்.

லண்டன் கால மாணவர் வாழ்க்கையில் , அப்போது இளைஞர்களுக்கு நாயக எழுத்தாளராக இருந்த பாபியன் ஹரால்ட் லாஸ்கியால் கவரப்பட்டார். மார்க்சிய வட்டங்களில் உழலலானார். பின்னர் தாகூருடன் விவாதம், காந்திய தாக்கங்களில் பயணிக்கலானார். அவரின் தேர்ந்த ஆய்வில் வந்த நூல்தான் ' எழுத்தாளர் காந்தி' என்கிற ஆங்கில நூல். 300 பக்கங்களுக்கு மேலான இந்நூல் 1969ல் , காந்தி நூற்றாண்டு தருணத்தில் வந்த அருமையான நூல்களில் ஒன்று. என்பிடி நிறுவனத்தார் கொணர்ந்தனர். இந்நூலின் மறு பதிப்புகளும் வந்துள்ளன. என்பிடி யில் கிடைக்கலாம். தமிழில் வந்ததா என எனக்குத் தெரியவில்லை.

பட்டாசார்யா இந்நூல் வழி காந்தி எழுத்தும் உரையாடல்களும் எப்படி அவர் சோதனைகளுடன் (empirically grown) வளர்ந்து வந்தது எனக் காட்ட உழைத்திருப்பார். அவரது வாசிப்பு நூல்கள் எப்படி அவ்வப்போது அமைந்தன என்பதைக் காட்டியிருப்பார். வாசித்ததை அவர் தன்வயப்படுத்தி எடுத்து மனதிலிருந்து மொழிக்கு மாற்றும் ஆற்றலை சொல்லியிருப்பார்.

குஜராத்தி எழுத்துக்களானாலும், ஆங்கிலவழி எழுத்தானாலும்- எப்படி சோதிக்கப்படும் எண்ணங்களை அனைவருக்கும் கடத்த முயற்சித்தார் காந்தி என்பதை பட்டாசார்யா இதில் சொல்ல வருகிறார்.

இந்தியன் ஒபீனியன், யங் இந்தியா, ஹரிஜன் என பத்திரிகைகளில், ஏராள பேட்டிகளில், விளக்கங்களில் அவருக்கு இருந்த தெளிவான சிந்தனை, சொற்சிக்கனம், பண்பும் மரியாதையும் நிறைந்த தன்மை, வாய்மைக்கும்

அகிம்சைக்குமான இடங்கள் என பபானி விவரித்து 27 இயல்களாக நூலை நடத்திச் செல்கிறார்.

டால்ஸ்டாய், ரஸ்கின், தோரோ, ராய் சந்த் , ரொமய்ன், ஷா, சாப்ளின், தாகூர் என அவர் மேற்கும் கிழக்குமாக சிந்தனை ஊடாட்டங்களை நடத்தினார். இன்னும் இங்கு சொல்லப்படாத ஏராளசிந்தனையாளர்களுடன் அவருக்கு விரிவான தொடர்பு இருந்தது. பபானி இந்நூலில் பயன்படுத்திய இரு அம்சங்கள் எனக்கு முக்கியமாக தெரிந்தது. அவை

Dialogue

More Self Sculpturing

இந்த இரண்டின் வழி தன் வாழ்நாள் முழுக்க ‘சுய செதுக்கலை’ செய்தவராக காந்தி பயணித்தார். தன்னை அறிந்தவர்களை அவர்களின் சுயத்தேடல் வழியாக உலகை உணர அவர் தொந்தரவு செய்துகொண்டேயிருந்தார்.

இந்நூல் இதுவரை தமிழில் வரவில்லையெனில், தேர்ந்த மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் கடாட்சத்தை பெற்றால் நல்லது எனத் தோன்றுகிறது.

காந்தி குறித்த இலக்கிய கிடங்கு வற்றாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறது. செல்பவர்கள் தாகம் தணியலாம், இல்லை மேலும் அதிகமாகலாம். அவரவர் பயிற்சி, சுபாவம் சார்ந்து தாகமும் அமைகிறது.

அக் 5, 2024

oct 8

ஒவ்வொரு மனிதருக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டு இருக்கலாம். அது வீடாக இருக்கலாம், நண்பர்கள், தெரு, அமைப்பு, அரசாங்கம் என எங்கு வேண்டுமானாலும் கிடைத்திருக்கக்கூடும்.

பேசாமல் இருந்து விடலாம். நாம் ஏன் நம் அபிப்பிராயங்கள் என மாற்றாக எதையாவது சொல்லிக்கொண்டு...நாம் ஏராளம் சொல்லிவிட்டோம், இனி அவரவர் பாதை அவரவர் வழி சிந்தனை அல்லது செயல்..சரி என்று உணர்ந்தால் தெளியட்டும்..சரி என உணர நேரமே எடுத்துக்கொள்ளாமல் பரபரப்பாக போய்க்கொண்டு இருக்கட்டுமே..அது அவரவர் ஏற்பாடு ..என்கிற எண்ணம் ஒவ்வொருவரின் மாலை காலத்திலும் அல்லது சாய் பொழுதில் தோன்றலாம். காலைப்பொழுதிலும் நண்பகலிலும் பரபரப்பாய் இருப்போர்க்கு சாய் பொழுது குறித்த விழிப்பு இருக்காது. ஏனெனில் ஒவ்வொரு சாய் பொழுதுக்கும் அதற்கான காலையும் நண்பகலும் இருந்திருக்குமே..அப்போது அது என்ன தனக்கான சாய் போது என ஒன்று உண்டு என நினைத்ததா என்ன?

காந்திக்கும் இப்படி அனுபவங்கள் ஏற்பட்டன. ஆனால் அவருக்கு எப்பொழுதும் விழிப்புநிலை பொழுதுதான். அவர் பிறரிடம் சொன்னவற்றையெல்லாம் ஏற்கும் போதுகளில் பலர் இருந்தனர். ஆகஸ்ட் 1947 நெருங்க நெருங்க மற்றவர் , காந்திக்கான சாய் பொழுதாக அதைப் பார்க்கலாயினர். அவர்களுக்கான விடியலாக உணர்ந்தனர். விடியலுக்கான பரபரப்பு பாவனையில் சிக்கிக்கொண்டனர். காந்திக்கு புதிய பிரச்சனை எழலானது. ஹரிஜன் பத்திரிகையை நடத்துவதா கை விடுவதா?

தன் தோழர்கள் இப்போது ஆட்சியாளர்களாக மாறுகிறார்களே..அவர்கள் செய்வது குறித்தோ அல்லது அது தவறென்று உணர்ந்தால் மாற்று வழிகாட்டுதல் ஒன்றையோ மக்கள் முன் வைக்க வேண்டிவருமே..அப்படி செய்தால் குழப்பம் நேரலாம் என்ன செய்யலாம் என காந்தி சிந்திக்கலானார். இனி ஹரிஜன் பத்திரிகை வேண்டாம், வந்தால் ஏதாவது சொல்லாமல் இருக்க முடியாது என முடிவெடுத்தார். இதை படேலிடமும் தெரிவித்தார்.

இது தொடர்பாக காந்தி தெரிவித்த சில வரிகள்

Sardar, I feel that Harijan should now be closed. It does not seem to me to be right to give contrary guidance to the country.

வாசகர்களுக்கு என அவர் மிகவும் நாசுக்காக தெரிவித்தது

It occurs to me now that freedom from British Rule has come, the Harijan papers are no longer wanted. My views remain as they are.

பெரும் ஆன்ம பலம் இருந்ததால் மட்டுமே அவரால் இப்படி சொல்ல முடிந்தது. நண்பர்களே நாட்டு மக்களே நீங்கள் விரும்புகின்ற அந்த சுதந்திரம் கிடைத்துள்ளது. (தான் விரும்புவதிலிருந்து அது மிக தூரத்தில் இருக்கிறது என அவர் நினைத்திருக்கக்கூடும்). அதற்கான பங்கை செய்துவிட்டேன். இனி என்னை ஹரிஜன் இதழை மூடுவது போல மூடிக்கொள்ளவேண்டும் என காந்தி சொல்வதாக எனக்குப்பட்டது. பெரும் வேதனை மனதின் துயரமான சொற்கள்தான். ஆனாலும் வாசகர்களுக்கு அவர் சூசகமாக குறிப்புணர்த்தி சென்றுள்ளார். My views remain as they are. அவை இன்னும் தீராமல் புத்தம் புதிதாக இருக்கின்றன. திறந்து பார்ப்பவர் மணம் நுகரலாம்.

(காந்தி மறைந்த பின்னரும் ஹரிஜன் வந்துகொண்டிருந்தது)

எதை நாம் மனம் ஒன்றி பல காலம் செய்தோமோ அதை குறிப்பிட்ட சூழலில் விடவேண்டும் எனத்தோன்றிவிட்டால், ஓரளவு காரண காரிய அறிவும் அப்படி செய்யச் சொல்லிவிட்டால் அதை சட்டென விட்டுவிடவேண்டும் . எதில் மிகப்பொருத்தமானவர் எனக் கருதப்பட்டோமோ, அதில் பின்னொரு நாள் அந்த ஒன்றில் எப்படி இவரெல்லாம் என காலம் தன் தீர்ப்பை பின் தேதியிட்டு தொங்கவிடும்... நாம் கூட ஏதாவது சொல்லிவிட்டுத்தான் சாய் பொழுதில் நிற்கிறோமோ..காலம் நமக்கானதை தொங்கவிடட்டும்

8-10-2024

oct 10

CITU leader says if the formed union is recognised they may withdraw strike and other demands may be discussed later. Detailed interview of com AS is given below in the link.

Registration is the first issue. Then the question of recognition by the employer comes. Formation of union is given as right in the constitution, but recognition is not such one , constitutional right. It is different in different industries. CG employees union recognition rules are different comparing railways. Even postal union recognition is now withdrawn, they are still fighting. In the BSNL we fought many years to bring recognition rules for recognizing more than one union.

During the time of formation of BSNL, NFTE BSNL name was objected by some champions of working class and the central registrar questioned about having Federation in that name. We finally fought and got that name registered.

Here com AS agreed to change the name instead of Having Samsung , as Sriperumbadoor union. This understanding is fair. They can seek and try to send their representatives to the so called workers council and make it a real bargaining entity. Hope things would end positively taking all the stakeholders into confidence and understanding the limitations in a particular time and context. Not a man from our rank and not a Paise from our pocket has been the best lesson for any trade union. Issue of taking care of jobs of employees is as important as settling the demands in any corporate private companies .

oct 11

Martin Luther King Jr wrote so in 1961

" The civilised world stands on the brink of nuclear annihilation. The present crisis stand for sober thinking, reasonable negotiation, and moral commitment.

More than ever before, the Gandhian method of non violent direct action must be applied in international affairs. This method must not be seen as merely a method to be used in conflicts within nations. It must be seen as a method which can be creatively used to resolve conflicts among the power blocks in the world today. Moreover, it must be used to arouse the conscience of these nations on the whole question of disarmament..

The choice is no longer between violence and non violence , it is either non violence or non existence"

In his Nobel peace prize acceptance address King said

"We will take direct action against injustice despite the failure of governmental and other official agencies to act first. We will not obey unjust laws nor submit to unjust practices. We will do this peacefully, openly , cheerfully, because our aim is to persuade. We adopt non violence because our aim is to persuade. We will persuade and if words fail, we will try to persuade with our acts..we are ready to suffer and risk our lives to become witness to the truth as we see it"

oct 11

தலைமை என்பது அற்புதமான மானுட கலை. எல்லோருக்கும் எளிதில் அது வசப்படுவதில்லை. தான் தலைமை தாங்கும் பகுதியில் உள்ளவர் ஏற்பில்தான் தலைமைத்துவம் ஒருவருக்கு அல்லது ஓர் அமைப்பிற்கு வாய்க்கிறது.

போராட்டங்கள் அதிருப்தி காரணமாக தவிர்க்க முடியாமல் உருவாகும்போது இருவித மனப்போக்குகள் சம்பந்தப்பட்ட மனிதர்களின் உளவியலில் உருவாகலாம். ஒன்று அதிருப்திக்கான காரணங்களை போக்கிவிட்டால், போக்கும் சூழல் தென்பட்டால் சமரசமாகி halt செய்து கொள்ளலாம் என்கிற மனநிலை. இது அந்த குழாமில் இருக்கும் சாதாரண பிரிவினரின் மனநிலையாக எழும்.

மற்றொரு மனநிலை கேடர்களின் மன எழுச்சி போர்க்குண மனநிலை. எந்த அமைப்பிற்கும் இந்த போர்க்குண மனநிலை மிக அடிப்படையானது. அதே நேரத்தில் மிகவும் சிக்கலான உளவியல் சிடுக்கும் கொண்ட மனநிலையது. தான் எப்போதும் மிகச் சரியானவர் என்பதுடன் , எதிரி எப்போதும் மோசமாக இருப்பவர் என்கிற தோரணையை காட்டும் மனநிலையது.

தலைமைக்கு மிகவும் கைகொடுக்கும் பிரிவு எப்போதுமே அதன் போர்க்குண கேடர்கள்தான். எழுச்சியை உருவாக்கும் பிரிவது. அதே நேரத்தில் தலைமையால் அதன் வேகத்தை கட்டுப்படுத்த முடியாத தர்மசங்கடங்களை உருவாக்கும் பிரிவும் அதுதான்.

கேடர்கள் பேச்சுவார்த்தைக்கு பொதுவாக செல்வதில்லை.தலைமைக் குழுவின் சிறு பகுதி தான் செல்லும். தலைமை அங்கு சாதுர்யமாக தன் நிலைப்பாட்டை எடுத்து வைத்தாலும், சில நேரங்களில் எதிர் தரப்பின் வாதங்களையும் அதனால் முற்றிலும் நிராகரிக்க முடியாமல் போகக்கூடிய சூழல் உருவாகும் - அல்லது உருவாக்கப்படும்.

சூழலை புரிந்து கொண்டு, போராட்ட உணர்ச்சி வேகம் தன் கட்டுக்குள் இருக்கும் கால நிலையை உள்வாங்கி, சேதாரமின்றி போராட்டத்தை முடிக்கும் கலை தெரியாமல் , 'தலைமை ' கேடர்கள் உடன் இழுத்துச் செல்லப்படுவதும் நடப்பதுண்டு. அச்சம் உள்ள தலைமை, தன் பெயர்

கெட்டுவிடக்கூடாது என்கிற தலைமை(பெட்டி வாங்கிட்டான் டா என உடன் குரல் வரும் என்று அஞ்சி) அப்படி இழுவைக்கு உள்ளாகும்.

தன் தலைமைக்கு பங்கம் நேரக்கூடாது என்ற ஒரே கவலைதான் அதற்கு இருக்கும். பிரச்சனை தீர்விற்கான சில படிகளை எட்டுவது என்பதைவிட , தனது போர்க்குணத்தை showcase செய்வதிலேயே அது கணக்கு வைக்கும். தன் தலைமை தன் தலைமை என்பதை தாண்டி அதனால் அந்த குறிப்பிட்ட conflict resolution க்கான காரியத்தை செய்யத் தெரியாது. யோசிக்கவும் செய்யாது. இப்படிப்பட்ட தலைமை ஆரம்ப சூரத்தனத்தால் மட்டுமே ஜீவித்திருக்கும். தீர்வு பற்றிய கவலை குறைவாக இருக்கும். நாளாக நாளாக பொறுப்பு எதுவும் எடுத்துக்கொள்ளாமல் போராட்டங்கள் தோற்பதில்லை என பொது நம்பிக்கையில் தன்னை மறைத்துக்கொள்ளும்.

நேர்மையும் அஞ்சாமையும் கொண்ட தலைமை , எதிர் தரப்பை மட்டுமல்ல தன் தரப்புடனும் விவாதத்தை எதிர்கொள்ளும் பக்குவம் பெற்றிருக்கும். தான் தலைமை தாங்கும் பிரிவினரில் சிலர் தன் மீது கரி பூசினாலும் , செருப்பு வீசினாலும், கருப்புக்கொடி காட்டினாலும், முட்டை வீசினாலும் , அவர்களுடன் உரையாடலை நடத்தும். தன் தலைமை மீது அதிருப்தி வந்தாலும், அவர்கள் அனைவரின் நலம் சார்ந்து மட்டுமே அது யோசிக்கும். தன் தலைமை பறிபோனாலும் கவலை கொள்ளாமல், குறிப்பிட்ட சூழலில் எட்டக்கூடிய தீர்வு ஒன்றையே அது கவனப்படுத்தும். வாயடிக்காது. ஜம்பப் பேச்சு , உசுப்பேத்தல், எதிரி குறித்து தரம் தாழ்ந்து பேசி தன் அணியை குஷிப்படுத்தல் போன்ற தகாத வேலையை இத்தலைமை செய்யாது.

தன் தரப்பால் போராட முடியும் என்பது எதிர் தரப்பை இளக வைக்க , to persuade என்பதற்காகத்தான் , வேறு institutionகளின் நோக்கங்களை நிறைவேற்ற அல்ல என்கிற ஆன்ம சுத்தம் அங்கு தொழிற்படும். எதிரிக்கு தன் மேல் இருக்கும் அவநம்பிக்கையை போக்கி, தங்களுடன் நடத்தப்படும் உரையாடல் மூலம் பொது நன்மை கூடுமே தவிர, பாழ்படாது என்கிற எண்ணத்தை அத்தலைமை உருவாக்க பாடுபடும்.

இரு தரப்பும் ஒவ்வொருவரும் மோசம் என்கிற அவநம்பிக்கையை எவ்வாறெல்லாம் குறைக்க முடியும் என்பதில்தான் போர்க்குணம் அஞ்சாமை இருக்கிறது. கூட்டமாக இருக்கும்போது வரும் அஞ்சாமை என்கிற உளவியலில் கிடைக்கும் வெற்றியைவிட , உள்ளே

பேச்சுவார்த்தைக்கு அழைக்க செய்திட உருவாக்கும் சூழலில், win win atmosphere உருவாக்கும் வெற்றியே அமைப்புகளை நீடித்து வாழ செய்யும். மற்றவை எல்லாம் soap bubble demonstration , சவுண்டு கிளப்பும் போராட்டங்களாக , தன் முதுகிற்கு தானே சபாஷ் போட்டுக்கொள்ளும் போராட்டங்களாக முடியும்.

இறக்கி விடுவதில் அல்ல வெற்றி, தீர்வு காண்பதில்தான் வெற்றி அமர்கிறது. ஓரடி முன்னேற்றம் என்றாலும் எப்படி அனைவரையும் காயப்படாமல், அழைத்துச் சென்றோம் என்பது தலைமையின் அழகு.

தன் தலைமை நிபந்தனை பேசுவோர்க்கு இவ்வழகு பொதுவாக வாய்ப்பதில்லை . போர்க்குணம் என்பது தன்னை நிறுவிக்கொள்வதல்ல, அவசியமாகும் போது தன்னை தியாகம் செய்துகொள்வது..

11-10-2024

oct 11

சாம்சங் சங்கம் அமைத்தல் பதிவு - போராட்டம்- சட்ட ஷரத்துகள் குறித்து...

1926 சட்டம் , தொழிற்சங்க பதிவைப் பேசுகிற சட்டம். 7 பேர்களோ அதற்கு மேலோ தொழிலாளர்கள், இச்சட்ட ஷரத்துக்கள்படி பதிவாளர் கேட்கக்கூடிய விவரங்களை கொடுத்து பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழைப் பெற்றுக்கொள்ள இச்சட்டம் வழி வகுக்குகிறது.

சங்கப் பெயர் குறித்து பிரச்சனை எனில் அது குறித்து பதிவாளர்க்கு உள்ள பொறுப்பை இச்சட்டம் சுட்டிக்காட்டுகிறது.

7 (2)ல் அதைக் காணலாம். அந்த ஷரத்து

(2) If the name under which a Trade Union is proposed to be registered is identical with that by which any other existing Trade Union has been registered or, in the opinion of the Registrar, so nearly resembles such name as to be likely to deceive the public or the members

of either Trade Union, the Registrar shall require the persons applying for registration to alter the name of the Trade Union stated in the application, and shall refuse to register the Union until such alteration has been made.

சாம்சங் பிரச்சனையில் போராடும் சங்கத்திற்கும், பதிவாளருக்கும் இடையில் நடந்த கடிதப்போக்குவரத்தை நான் பார்க்கவில்லை. நிர்வாகம் எதிர்க்கிறது என்ற தகவல் செய்திகளாக வருகின்றன. பிரண்ட்லைன் பேட்டியில் தொழிற்சங்கத்தலைவர் தோழர் ஏ எஸ் அவர்கள் , அந்தப் பெயரை மாற்றிக்கொள்வதில் சிக்கலில்லை என்கிறவாறு பேட்டி அக் 9, 2024ல் வெளியானது. இக்கருத்தை கடிதம் மூலம் போராடுபவர்கள் பதிவாளருக்கு தெரிவித்திருந்தார்களா என அறியமுடியவில்லை. பதிவாளரும் அரசாங்கமும் நீதிமன்ற விவகாரம் என ஆறப்போட்டுள்ளனர்.

பதிவாகிவிட்டால்/ அங்கீகாரம் ஏற்பட்டால் மீதி பிரச்சனைகளை பின்னர் கூட பேசிக்கொள்ளலாம் என அப்பேட்டியில் சொல்லப்பட்டுள்ளது.

நிர்வாகம் நல்லெண்ண அடிப்படையில் போராடுகின்ற தலைவர்களை அழைத்துப் பேசி தங்கள் நிலையை எழுத்துபூர்வமாக தெரிவிப்பது ஆரோக்கியமான ஒன்றே. No work No pay என்றில்லாமல் அதிலும்

நல்லெண்ண அடிப்படையில், வருகிற நாட்களில் உற்பத்தியில் முன்னேற்றத்தைக் காட்டக்கூடிய உறுதிமொழியை பெற்று சம்பளத்தை நிறுவனம் தொழிலாளர்க்கு கொடுக்க முன் வருவதும் ஆரோக்கியமானது. அங்கீகரிப்பது என்பது பதிவிற்குப் பின்னரான விஷயம். சட்டப்படி என்றால் அது புதிய லேபர் கோடில் வருகிறது

1926 சட்டம் தொழிற்சங்க அங்கீகாரம் குறித்து பேசவில்லை.

தற்போது லேபர் கோட் என்பதை மத்திய அரசு கொணந்துள்ளது. மத்திய தொழிற்சங்கங்கள் அதை ஏற்கவில்லை.

தொழிற்சங்க பதிவு, அங்கீகாரம் பற்றி இச்சட்டம் பேசுகிறது. THE INDUSTRIAL RELATIONS CODE, 2020 (28 செப் 2020) என அதற்குப் பெயர்.

1926 சட்ட ஷரத்துகளுடன் புதியவற்றை இணைத்து கொண்டுவந்துள்ளனர். இதில் சாப்டர் 3 தொழிற்சங்கம் பதிவு, அங்கீகாரம் பற்றிப் பேசுகிறது.

7பேர் என்பதுடன் 10 சத தொழிலாளர் அல்லது 100 பேர் இதில் எது குறைவோ அவ்வளவு உறுப்பினர் இருந்தால்தான் பதிவு என விதியை இறுக்கமாக்கியுள்ளனர்.

பெடெரேஷன், மத்திய சங்கம் அமைக்க இவ்விதியில் இடம் கொடுத்துள்ளனர்.

பதிவாளர் அதிகாரம் 1926 சட்டப்படி வைக்கப்பட்டுள்ளது. பதிவு பிரச்சனை இருந்தால் ட்ரிப்யூனல் போக இச்சட்டம் இடமளிக்கிறது.

அங்கீகாரம் பெற்ற தொழிற்சங்கம் அல்லது பேச்சுவார்த்தை கவுன்சில் என்பதை அதற்கான ஷரத்துக்களை இச்சட்டம் பேசுகிறது. ஷரத்து 14 முழுமையாக அங்கீகாரம் பற்றிப் பேசுகிறது.

சாம்சங் போராடும் தொழிலாளர் பிரச்சனை உளவியல் சிக்கல் ஏதும் தராமல் விரைவில் முடிவது நலமானது. சம்பந்தப்பட்ட மந்திரிமார்கள் போராட்டக்காலத்தில் ஊதியம் இல்லை என்பதை மாற்றி வழங்கிட , மனிதாபிமான மற்றும் தொழில் அமைதி என்கிற நல்ல நோக்கிலும் பரிசீலித்து சாம்சங் நிர்வாகத்துக்கு அறிவுறுத்துதல் செய்தல் சூழலை மேம்படுத்தும்.

அதேபோல நிர்வாகம் சொல்லும் கவுன்சிலில் போராடும் தொழிலாளர் சார்பில் சிலரையும் இணைத்துக்கொள்வதும் நலம். பதிவு அங்கீகாரம் என்கிற பிரச்சனை தீரும்வரை, இந்த ஏற்பாடு போராடுகிற ஊழியர்களின் உணர்வுகளுக்கும் சற்று மதிப்பளிக்கும் இடைக்கால ஏற்பாடாக இருக்கும். அமைச்சர் குழாம் இதிலும் தலையிட்டு தீர்ப்பது நலமானது

பின்குறிப்பு:

சாம்சங் இந்தியா தொழிற்சங்கத்தை அமைக்க முடிவெடித்த நாள் 16-6-2024

தொழிற்சங்க பதிவிற்கு விண்ணப்பித்த நாள் 26-6- 2024

தொழிற்சங்கம் SIWU சார்பில் 20 அம்ச கோரிக்கைகளை நிர்வாகத்திற்கு தந்த நாள் 11-7-2024

சாம்சங் நிர்வாகம் மூன்று அம்சங்களை மறுத்ததாக சொல்லப்படுகிறது. ஒன்று தொழிற்சங்கம் என்பதை ஏற்பதில்லை கொள்கை, மற்றது நிர்வாகி பட்டியலில் CITU தலைவர்கள் பெயர்.., சாம்சங் என்ற பெயரை பயன்படுத்துவதை ஏற்க முடியாது . இது எந்த நாள் என தொழிற்சங்கத்தால் சொல்லப்படவில்லை

தொழிற்சங்கம் வேலைநிறுத்த அறிவிப்பை கொடுத்த நாள் 19-8-2024

பதிவு பெறுவதில் காலதாமதமானதால் உயர் நீதிமன்ற வழக்கிற்கு செப் 20, 2024. நீதிமன்றம் பதிவு குறித்து விவாதித்து இறுதிப்படுத்த சொன்னது by 14-10-2024

சாம்சங் தான் அமர்த்திய ஒர்க்கர்ஸ் கமிட்டியுடன் புரிவுணர்வு போட்ட நாள் 7-10-2024

அடக்குமுறை கைதுகள் 9-10-2024

அவசர கூட்டத்திற்கு தொழிலாளர்களை சங்கம் அழைத்த நாள் 11-10-2024

பார்க்கலாம் என்ன முடிவு எடுக்கப்போகின்றனர் என்று.

oct 12

அறிஞர் தோழர் ஸ்டாலின் ராஜாங்கம் எழுதிய நூல் 'நெடுவழி விளக்குகள்- தலித் ஆளுமைகளும் போராட்டங்களும்'.

ஆகஸ்ட் 2022 ல் வந்த நூல். காந்தி கல்வி நிலையத்தில் தோழர் கணேசன் அறிமுகம் செய்துள்ளார். வாய்ப்புள்ளவர் கேட்டுக்கொள்ளமுடியும்.

இயக்கம் - இலக்கியம்- ஆளுமைகள் என்கிற பிரிவிற்குள் 14 கட்டுரைகளின் வழியே வெளிச்சத்திற்கு வராத வரலாற்று வேர்களை தேடிய பயணத்தை தோழர் ஸ்டாலின் ராஜாங்கம் செய்துள்ளார். தேடலும் உழைப்பும் இந்நூல் உருவாக கைகொடுத்துள்ளன.

ஆளுமைகள் வரிசையில் வெளிக்கொணரப்படவேண்டும், பங்களிப்புகள் விவாத வெளியைத் தொடவேண்டும் என்கிற நோக்கில் பெரியவர்கள் டாக்டர் சேப்பன், வை. பாலசுந்தரம், சக்திதாசன், தலித் ஞானசேகரன், தலித் சுப்பையா போன்றவர்களின் இயக்கப்பணிகள் பேசப்பட்டுள்ளன.

அமைப்பாக மட்டுமின்றி ஆங்காங்கே வதைகளுக்கு எதிராக தனி மனிதர்களாக இழிவை ஏற்க மறுத்து கண்ணியத்திற்காக நடத்தப்படும் போராட்ட வரலாறுகள் எழுதா பிரதிகளாக கிடக்கின்றன என்ற உணர்வை ஆசிரியர் கிடத்துகிறார்.

ரானடே குறித்த பதிவில் அம்பேத்கர் பார்வையில் காந்தி குறித்த விமர்சன பதிவு இருந்தாலும், காந்தியால் உருவான தலித் பள்ளிகள் என்பது தனி அத்தியாயமாக பேசப்பட்டுள்ளது.

ஜெ பாலசுப்பிரமணியம் எழுதிய சூர்யோதய நூல் விடுதலைக்கு முன்னரான தலித் இதழ்கள் பற்றி பேசிய பிரதி. இதழ்களுடன் பதிப்புத்துறையில் தலித் முன்னோடிகளின் பங்களிப்பும் தேடப்பட்டு ஆவணமாக வேண்டிய தேவையை ஆசிரியர் முயற்சிக்கிறார்.

தலித் அடையாளம் என்பது ஒற்றை அடையாளமாக காட்டப்படுவது சரியான எதார்த்தமல்ல என்பதை மதுரைப்பிள்ளை வள்ளல் வழியாக ஆசிரியர் எடுத்துச் செல்கிறார். சாதியமைப்பில் பலவித தொழில்கள் அனுபவங்கள் இருந்துள்ளன என்கிறார். இந்த இயலில் மதுரைப் பிள்ளை தொண்டுகள் விரிவாக பதிவாகியுள்ளன

1982 சென்னை நோக்கிய பேரணி போராட்ட இயக்கம் பல இடங்களில் பேசப்பட்டுள்ளது. திமுகவில் ஏற்பட்ட அனுபவங்கள், இந்திய குடியரசு கட்சி முன்னோடிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர்.

விசுவாசத்தை காட்டும் வரலாறா, தாமே எழுந்து நின்று போராடியவரலாறா எது வெளிச்சம் பெற்றது என்கிற முக்கிய கேள்வியை நூல் எழுப்பியுள்ளது.

அம்பேத்கரின் ரானடே காந்தி ஜின்னா ஒப்பீட்டில், புனே ஒப்பந்தம் குறித்த புரிதலில் வேறுபட்ட பார்வைகளுக்கு இடமுண்டு . அவரவர்க்கு கிடைக்கக்கூடிய sources பொறுத்து பார்வை மாறக்கூடும்.

வாசித்து புரிந்துகொள்ள வேண்டிய நூல்

12-10-2024

oct 13

பேரா முஷிருல் ஹாசன் பற்றி முன்பொருமுறை முகநூலில் பதிவை தந்திருந்தேன். உலகோர் மதித்த வரலாற்றாய்வாளர். ஜமிலா மில்லியா இஸ்லாமியாவில் துணைவேந்தராக இருந்தவர். காந்தி, காங்கிரஸ் , சரோஜினி என பல நூல்களின் ஆசிரியர்.

ஹாசன் குறித்து 'என் வாசிப்பில் ' நூலில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அவரது மிக முக்கிய ஆக்கமான 'நம்பிக்கையும் விடுதலையும்- வரலாற்றில் காந்தி' யை மறுவாசிப்பு செய்ய மனம் (Faith and Freedom Gandhi in History) நாடியது. இந்நூல் 2013ல் ஆங்கிலத்தில் வந்தது. அளவில் பெரிய புத்தகம். தமிழர் பெரிதாக கண்டுகொள்ளாத நூல்களில் ஒன்று. எனவே மொழியாக்கம் குறித்து சொல்வதற்கில்லை.

4 பகுதிகளில் 15 இயல்களை ஆசிரியர் யாத்திருப்பார்.

சுயராஜ்யம் நடந்த பாதையும் நடக்காததும்,

நேருவியர்களாகிய நாங்கள்,

மகாத்மாவின் இறகுகளில்,

இளவரசுகளும் இரந்துண்போரும்,

காந்தி இஸ்லாம் தேசம்,

மரபுடனும் நவீனத்துடனும்,

கீதா கங்கா காயத்ரி காந்தி,

தலை பூ எதுவானாலும் எனக்கே -பாகிஸ்தான்,

உலகம் என் மைதானம்,

பூக்கள் வண்ணமயமாகட்டும்,

பாபு காந்தி தீர்ந்துவிட்டாரா ?

போன்ற இயல்கள் எனக்கு ஈர்ப்புக்குரியவையாக இருந்தன.

இந்நூலில் 1920 ஒத்துழையாமை, 1930-31 சட்டமறுப்பு, 1942 பிரிட்டிஷாரே வெளியேறுக ஆகிய நிகழ்வுகளை சுற்றி எழுதியிருக்கிறேன் எனச் சொல்லிவிட்டு காந்தி சொன்ன அறிவுரை ஒன்றை தான் கடைபிடித்ததாக

ஹாசன் சொல்லியிருப்பார். நம் ஒவ்வொருவருக்குமான அறிவுரையும் கூட. அதை மட்டும் இங்கு சொல்ல விழைகிறேன்.

Let each one of us select our task, adhere to it and stick to it thick and thin. Let us , moreover , not think of the vastness and pick up the portion what we can handle best

உலகின் இந்தியாவின் அனைத்து பிரச்சனைகளையும் தீர்த்துவிடமுடியும் என மண்டையில் ஏற்றிக்கொண்டு பாசாங்கு செய்யாதே. உன் கைக்கு எட்டும் நிலையில் உள்ளவற்றை பார். உன்னை நீ உய்வித்துக்கொள். அப்படியான சாலையில் இந்தியா உய்விப்பதை நீ காண்பாய் என 1910ல் அவர் மகன்லாலுக்கு எழுதினார்.

நேருவோடு அவரது உரையாடல்கள் கணிசமானவை. அவர்தான் நேருவை அரசியல் வாரிசு என்றார். ஆனாலும் வேறுபட்ட பார்வைகள் இருவரிடமும் இருந்தன. அவரை சுற்றித்தான் நேரு உள்ளிட்ட பல ஆளுமைகள் வளர்ந்து உயர்ந்தனர். அப்போது காந்தி சொன்ன வரி கூட நமக்கு வெளிச்சம் தரக்கூடிய ஒன்றே.

We must each serve according to our lights, not borrowed. உனக்கு சரி என சோதித்த ஒன்றை, அந்நேரத்தில் உணரும் உண்மைக்கான தரிசனத்தை இறுகப்பற்றி நகரத்துவங்கு. அவர் இப்படி இவர் அப்படி என வம்பளப்புகளில் நேரம் கிடத்தாமல், உன்னளவிலான ஓரடியை வைக்கப்பார். சரி எனத்தோன்றி ஏற்பவர்கள் அடிகளும் உன்னுடன் தொடரும் என்பதை அவர் சோதித்து பார்த்து தன் மரபாக - the exemplary ness என விட்டுச் சென்றுள்ளார்.

இங்கு கடன் வாங்குதல் என்பது அப்படியே எழுத்துப்படி பொருள்கொள்ளவேண்டிய ஒன்றல்ல. பிறர் எழுத்துக்களை சிந்தனையை தன் சூழலில் பொருத்தி அதன் ஆத்மார்த்த உள்வாங்குதலை காந்தி மேற்கொண்டவர் என அவர் குறித்து அறிந்தவர் உணர்வர். சரி என மனதார ஒன்றை ஏற்காமல், வேறு தேவைகளுக்காக , சில நேரம் மனதை ஏமாற்றிக்கொண்டு , பேசாதே என காந்தி உணர்த்துவதாக நான் எடுத்துக்கொள்கிறேன்.

எனக்கு தொந்திரவாக இருக்கக்கூடிய இன்னொரு வாசகம்- அறிவு சேகரம் கொண்டோர் பிறர் மொழியை பேசுகிறார்கள்- ஞானியோ தன் மொழியையே

பேசுகிறான்..(those knowledgeable speak others languages, those having wisdom speak his language) என்பதாக இருக்கிறது..

காந்தி தொடர்ந்து அவர் மொழியில் உரையாடிக்கொண்டிருக்கிறார்.. நான் கடன் வாங்கலாம் , ஆனால் அதற்கும் எனக்கான மொழி பயிற்சி தேவைப்படுகிறதே...

முஷிருல் நூல் காந்தி இலக்கிய கிடங்கில் அவ்வப்போது எடுத்து அசைபோடத்தகுந்த நல்ல புத்தகம்

13-10-2024

oct 13

இவ்வுலகில் மனிதர்கள் நம்பிக்கையுள்ளவர்கள், நம்பிக்கையற்றவர்கள் என்கிற இருபிரிவுகளாகவும்- அதன் சரி ஏற்பு- சரியின்மை ஏற்பின்மை என வாதாடக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் activistsகளாக இருப்பர். வேறொரு passive பகுதியினர் ஏதும் தோன்றவில்லை- கருத்தில்லை என பொருட்படுத்தாதவர்களாக பயணிப்பார்.

ஒரே மனிதன் வெவ்வேறு தருணங்களில் இந்த மூன்று முகம் கொண்டவனாக இருப்பார். அதாவது அனைவருக்கும் இந்த மூன்று முகங்களும் பொதுவாக இருக்கும்.

கடவுள் விஷயத்தில் நம்பிக்கையுள்ளவர் ஆத்திகராகிறார். அப்படியெல்லாம் சக்தி இல்லை என மறுப்பவர் நாத்திகராகிறார். இதில் மூன்றாமவர் அறியொணாவாதி எனும் புத்த சாயல் பெறுகிறார். நம்பிக்கையுள்ளவர் பக்தனாகிறார். இல்லாதவர் 'துஷ்டன் தூஷிப்பவர்' என பக்த பிரிவால் ஏசப்படுகிறார். நாத்திகர் பக்த பிரிவை 'பத்தாம்பசலி- மூடநம்பிக்கையாளன்- ரீஆக்ஷனரி' எனத் தூற்றுவார்.

பக்தப்பிரிவினர் இல்லாமல் கடவுள் சமய அமைப்புகள் நகரா.

இதை அரசியல் , ஆட்சி, கட்சி, வேறு அமைப்புகள் என எல்லாவற்றிற்கும் பொருத்திப் பார்க்கலாம். அங்கும் கடவுள் துதி உண்டு. ஆத்திக பக்த விசுவாசப் பிரிவு உண்டு. மறுத்து ஏற்க மறுக்கும் நாத்திக 'துஷ்ட ஓடுகாலி' பிரிவு உண்டு. இதையெல்லாம் பொருட்படுத்தாது சரி தவறு என அறிய விரும்பா passive பிரிவு உண்டு.

என் நண்பன் நமரி 30 ஆண்டுகளுக்கு முன்னர் சொன்னான்..கடவுள் ஆனாலும் கம்யூனிசம் ஆனாலும் , வேறு கொண்டாடப்படும் எந்த இசமானாலும் கற்பிக்கப்படுபவையே..நீ அங்கு பக்தன் -நாத்திகன் - அறியவொணாவாதி என்கிற மூன்று முகத்தையும் வெவ்வேறு தருணங்களில் அடைவாய் என்று...

வாழ்வு பெரும் தரிசனங்களை அதாவது அனுபவங்களை மன நெகிழ்வுகளை, பகுத்துப் பார்க்கும் அறிவை மனிதனுக்கு தந்துகொண்டேயிருக்கிறது. மனிதன் அதற்கு கடவுள் சமயம், அறிவியல்

தொழில்நுட்பம், கலை இலக்கியம் போன்ற பொது அடைப்புகளிட்டு - உலகை சக சமூகத்தை வியாக்கியானப்படுத்திக்கொண்டேயிருக்கிறான்.

சமயமே பாதை என்கிறான்- பகுத்தறிவே பகலவன் என்கிறான்- அறிவியலே ஆசான் என்கிறான்- தொழில்நுட்ப ஆயுத பூஜை செய்கிறான்- கலை இலக்கியமே இதயம் என்கிறான். அதனதன் பக்தன் ஒன்றை மற்றதிற்கு மேலாக நிறுத்த விழைகிறான். ஒவ்வொன்றிற்குள்ளும் உள்போட்டிகளையும் உருவாக்கிக்கொள்கிறான். தன் மார்க்கமே உயர் வழி என அடையாளம் காட்டுவதற்காக தியாகம் செய் என அறைகூவி அழைக்கிறான். பலரை பலிகொடுக்கும் பூசாரியாகிறான்.

உலகம் எல்லாவிடங்களிலும் தனக்கான புரோகிதர்களை priesthood களை வாதாட உருவாக்கிக்கொண்டேயிருக்கிறது. புரோகிதர்களின் பகடைகாயாக உலகம் தன்னை நகர்த்தவும் அனுமதித்துக்கொண்டேயிருக்கிறது...

oct 14

பகிர்ந்துகொள்ள நல்ல அனுபவம்

அந்த நல்ல அனுபவம் ஏற்பட்டு 30-35 ஆண்டுகள் ஆகியிருக்கலாம். 1990களில் என்று நினைவிலிருந்து பேசுகிறேன். ஆண்டு துல்லியமாக நினைவில் இல்லை என்றாலும் அனுபவத்தின் சாரம் நினைவில் இருக்கிறது.

வ சோ ஆண்கள் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் நிர்வாகத்தை எதிர்த்து தங்கள் போராட்டத்தைத் துவங்கி நடத்தி வந்தனர். திருவாரூரில் 1978 இறுதியிலிருந்தே கல்லூரி ஆசிரியர் துவங்கி , தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஈறாக பழக்கம் ஏற்பட்டது. 1979 ஆரம்பத்திலேயே 50க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் கவுன்சிலும் அமைக்கப்பட்டு தோழர் வெங்கட் ராமன் (CITu அப்போது) தலைவராக, பட்டாபிராமன் (nfte)செயலராக செயல்படத்துவங்கினோம். அதன் வரலாறு அதில் பெரும்பணி செய்த நல்ல தலைவர்கள் கதை என்பது வேறு.

1990களில் பல்வேறு ஆசிரியர் அமைப்புகளின் தலைவர்கள் மத்தியிலும், அவர்களின் உறுப்பினர் சிலர் மத்தியிலும் என் போன்றவர்கள் நல்ல அறிமுகம் பெற்றிருந்தோம். எல்லா போராட்டங்களிலும் எங்கள் ‘முகம் ‘ இருக்கும். அப்படித்தான் வ சோ மே பள்ளி போராட்டத்திலும் நான் உட்பட பலர் போய் நின்றோம்.

ஒரு வாரத்திற்கு மேல் ஆன நிலையில் மாணவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்கிற எண்ணத்தில், மரத்தடி பள்ளிகள் என என் ஆலோசனை ஏற்கப்பட்டு சோதனைகள் நடந்தன. நிர்வாகம் போலீஸ் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தது. நெருக்கடிகள் வரத்துவங்கின. எப்போதும் பேச்சுவார்த்தைக்கு வரத்தயார் என்ற செய்தியை அனுப்பிக்கொண்டிருந்தோம்.

நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு தயங்கியது. சற்று எரிச்சல் கூட அடைந்தது. மாவட்ட ஆட்சியர் தன் தலைமையில் கட்டுப்பாட்டுடன் பேச்சுவார்த்தை நடைபெறும் என அவர்களை ஏற்கச் செய்தார்.

ஆசிரிய பெருமக்கள் சார்பில் முன்னணி சீனியர் ஆசிரியர்கள், பொறுப்பாளருடன் , நானும் வரவேண்டும் என்றனர். உடன் சென்றேன்.

பேச்சுவார்த்தை ஏற்பாட்டிலேயே போராடும் தரப்பை சற்று humiliate செய்வது போல் , எங்களுக்கு பெஞ்சுகளும், மாவட்ட ஆட்சியர் அருகாமை நாற்காலிகளில் நிர்வாகமும் உட்கார வைக்கப்பட்டதைப் பார்த்தோம். பொறுமை என மனம் சொல்லியது. 15 நாட்களுக்கு மேலாக நடக்கும் போராட்ட தீர்வு என்பது தலையாய எண்ணமாக இருந்தது.

போய் அமர்ந்தவுடனேயே, நிர்வாகம் கலெக்டர் காதில் ஏதோ சொல்ல, அவர் கோபமடைந்து , என்னை முதலில் வெளியேறச் சொன்னார். கலெக்டருக்கு மேல் மாவட்டத்தில் எவருக்கும் அதிகாரம் இருக்க முடியாது என சற்று வேகத்தைக் கூட்டினார். ஆசிரியர் பெருமக்களுக்கு சங்கட நிலை ஏற்பட்டது. அவர்களிடம் நான் வெளியே நிற்கிறேன், பேச்சு வார்த்தைக்கு என்னால் இடையூறு வந்துவிடக்கூடாது என்பதை சொன்னவுடன், அய்யா புலவர் அ ப பாலையன், சரி பட்டாபி , நாங்கள் பேசிவிட்டு நல்ல செய்தி தருகிறோம் என்றார். நல்லது அய்யா என நான் வெளியேறி , நிர்வாகத்திற்கு முதல் வெற்றியை தந்தோம். பேச்சு வார்த்தை நடந்து , இரு பக்கத்திற்கும் மாவட்ட ஆட்சியர் சொன்ன அறிவுரைகள் ஏற்கப்பட்டு பிரச்சனை சுமூகமாக முடிந்தது.

எங்களைப் போன்ற வெளியாட்கள் கெடுக்கிறார்கள் என போலீஸ், கலெக்டரிடம் புகார் போனதை பின்னர் அறிந்தோம். பொது நன்மைக்கு நிற்பவர்கள் நாங்கள் என்ற எண்ணம் நிர்வாகத்திற்கும் மெதுவாக செல்லத்தொடங்கியது.

சிறிது நாட்களில் நிர்வாகத்துடன் ஆசிரியர் பெருமக்களுக்கு கண்ணியத்துடன் நல் உறவு மேம்பட்டது. என்னைப்பார்க்கும் போதும் வெறுப்பில்லாமல் நிர்வாகத்தில் மிகவும் tough என கருதப்பட்ட அந்த அம்மையார் புன்முறுவல் செய்யவும் தயங்கவில்லை.

பின்னர் எம் ஏ பி எட் உடன் எவராவது எஸ் சி பிரிவில் தகுதியுடையவர் இருந்தால் தெரிவியுங்கள் என்ற செய்தி நிர்வாகத்திடமிருந்து அய்யா அ ப பாவிற்கு வந்து, எனக்கு அ ப பா, சந்திரசேகர் அய்யா வழி தெரிவிக்கப்பட்டது. எங்கள் சங்கத்தில் அற்புத மிகத் தோழமை கொண்ட தலைவராக காளிமுத்து இருந்தார். அவர் மகனுக்கு சொல்லலாம் என மூத்த தோழர் ராமதுரையும் நானும் பேசி தெரிவித்தோம். அந்த அம்மையாரிடம் ஒரு வார்த்தை சொல்லுங்கள், நாங்கள் துணை நிற்கிறோம் என அய்யா அ

ப பா, அய்யா சந்திரசேகர் அறிவுறுத்தினர். தயக்கத்துடன் சென்றேன். அவர் பெயர் முகவரி கொடுத்து செல்லுங்கள், பார்க்கலாம் என்றார். உள்ளே கூட அழைக்கவில்லையே, கோபம் இன்னும் இருக்கிறது போலும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

பெயர் கொடுத்த அந்த பட்டதாரி வகுப்பு எடுக்க அழைக்கப்பட்டு, அந்த அம்மையார் நேரில் அதைப் பார்த்து , காளிமுத்து அவர்களின் மகனுக்கு முதலில் தற்காலிக வேலை நியமனத்தை அளித்தனர். பின்னர் நிரந்தரமாகி மாணவர்களிடம் பெரும் அன்பை பெற்றார் அவ்வாசிரியர். அவர் பெயரை சொன்னால் தவறில்லை. சாரதி என குழந்தையாக நாங்கள் பார்த்தவர். சமீபத்தில் நடுத்தர வயதிலேயேஅவர் மறைந்தது வேதனை. நாங்கள் நுழைவு சீட்டை மட்டுமே அவருக்கு பெற்றுக்கொடுத்தோம். அவர் தன் திறமையைக் காட்டி அந்த பணியில் சிறக்கக் காட்டினார்.

இப்படி போராட்டம் தீர்வு தொடர் நல்லுறவு என நல்ல அனுபவம் ஒன்று எங்களுக்கு ஏற்பட்டது.

14-10-2024

oct 14

Communism in India Unpublished documents Subodh Roy

பிரிட்டிஷ் உளவுத்துறையினரால் போல்ஷ்விக்குகள் ஆதரவு இந்தியர்கள் (உள்நாட்டு, வெளிநாட்டு) குறித்து பல்வேறு அறிக்கைகள் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றை National Archives லிருந்து தொகுத்து 1970களில் Communism in India Unpublished documents என்று 3 வால்யூம்களை சுபோத் ராய் என்பார் கொணர்ந்தார். முதல் தொகுப்பு 1919-24வரையிலான காலத்திற்குரியது.

1997ல் சிபிஎம் சார்பான என்பிஏ கணசக்தி பிரிண்டர்ஸ் இதைக் கொணர்ந்தனர். அதிகாரபூர்வ கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் இடம் பெற்றிருக்காத சில செய்திகள் இதில் இருப்பதால், ஆய்வாளர்க்கு சரி பார்த்து வரலாற்றை புரிந்து கொள்ள இத்தொகுப்பு உதவலாம் என சுபோத் தெரிவித்திருந்தார்.

இந்த அறிக்கைகள் எல்லாம் Director criminal Intelligence Home இலாகாவிலிருந்து வாரந்திர மாதாந்திர அறிக்கைகளாக அனுப்பபட்டவை. உளவுத்துறை அனுப்பும் குறிப்புகள் என்ற அளவில்தான் இவற்றை காணவேண்டியிருக்கும். எல்லாமே எட்டுக்கட்டுகள் என்பதாக இராது. observation facts speeches written docs என்பனவும் இவ்வறிக்கைகளில் இடம் பெறத்தக்கவகையில் அவர்கள் செயல்பட்டுள்ளனர்.

எம் என் ராய், பரக்கத்துல்லா, செர்வாடி (லெனினுடன் தொடர்புகொண்ட சுக்ரவர்த்தியைத்தான் செர்வாடி என), ஹர்தயாள் , உபயதுல்லா, மாஸ்கோவில் இருந்த டாக்டர் ஹபிஸ், உம்ராவ் சிங், மற்றும் தாஷ்கண்ட் வாழ் இந்தியர் என பலர் குறித்து அறிக்கைகள் 1919ல் அனுப்பப்பட்டுள்ளன.

அதில் ஒரு செய்தி ராஜாஜி குறித்த 1920 ல் அனுப்பப்பட்டுள்ளது. ஏப்ரல் 1920 அறிக்கை 35 இண்டெர்னல் என அது ராஜாஜி உட்பட பலரைப் பற்றிய செய்தியாக இருக்கிறது. துர்காதாஸ் என்கிற வங்கவாசி கல்லூரி 4 ஆம் ஆண்டு மாணவன் போல்ஷ்விக் தொடர்புடன் இருக்கிறார் என்பது அதில் இடம்பெற்றுள்ள முதல் செய்தி. அவன் ஜித்தேந்திர தாஸ் என்கிற தீவிரவாதியால் ஈர்க்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது பெயராக ராஜாஜி பெயரை சொல்லியுள்ளனர். அச்செய்தி: சி ராஜகோபாலாச்சாரி. இவர் வழக்கறிஞர் போல்ஷ்விக் தீவிரவாத கருத்துக்களை பேசிக்கொண்டிருக்கிறார். தொழிலாளர் கொந்தளிப்புக்களை உருவாக்கி அதன் மூலம் புரட்சியை செய்யலாம் எனப்பேசி வருகிறார். இவருக்கு துணையாக குண்டூரில் இளம் வழக்கறிஞராக தொழில் செய்யும் சுக்கிணி நாராயண அய்யர் இருக்கிறார். இந்த நாராயணன் அயர்லாந்தில் சின்பீன் போராளிகளுடன் தொடர்பில் அங்கு இருந்துவிட்டு இப்போது குண்டூர் வந்தவர். இவர்களை மதராஸ் போலீஸ் கண்காணித்து வருகிறது. ராஜகோபாலாச்சாரி மாகாணம் முழுதும் சுற்றுப்பயணம் செய்து வருகிறார்.

அடுத்தப்பெயர் ஜேத்மால் பரசானம்- சிந்து பிரிவு. இவர் கராச்சியில் சோசலிச பிரச்சாரம் செய்து வருகிறார். தொழிலில் அமைதியின்மை, பட்டினி கிடப்பவர் புரட்சி என இவர் பேசிவருகிறார். அடுத்துன் சமன்லால், சுவாமி விச்சாரே பற்றி எழுதியுள்ளனர். சமன்லால் முதல் மத்திய தொழிற்சங்கமான ஏ அய் டி யு சி ல் பொறுப்பில் இருந்தவர். எழுச்சி மிகுந்த மானிபெஸ்டோ ஒன்றை தயாரித்தவர்.

புகழ் வாய்ந்த பிபின் சந்திர பால் பற்றி இவ்வாறு இந்த அறிக்கை 35 பேசுகிறது. இவர் நேரிடையாக போல்ஷ்விசம் எனச் சொல்லாவிட்டாலும் , முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சியின் அவசியம் எனப் பேசி வருகிறார். பிரிட்டனின் லேபர் பார்ட்டி போன்ற ஒன்றை சொல்லி வருகிறார்.

அடுத்த சுவையான தகவல், பம்பாயில் நடந்த கிலாபத் மாநாட்டில் கொணரப்பட்ட தீர்மானம் குறித்து. அதைக் கொணர்ந்தவர் அலகாபாத் சேர்ந்த மௌல்வி முகம்மது பகீர். ஒருமுறை நபிகள் நாயகத்துடன் லெனினை ஒப்பீடு செய்ததால் முஸ்லீம்கள் அதிருப்தி அடைந்தனர் என்பது இருந்தாலும், போல்ஷ்விசம் எதிர்ப்பு என்பதை முஸ்லீம்கள் நன்மை கருதி கைவிட வேண்டும் என்பது அவர் கொணர்ந்த தீர்மானம். அதை சார்பாளர்கள் ஏற்கவில்லை என்கிற செய்தி அனுப்பப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

ஏப்ரல் 1920 நம்பர் 103 அறிக்கையில் மிக முக்கிய செய்தி சொல்லப்பட்டுள்ளது. ஜாலியன்வாலாபாக் குறித்து லெனின் கவலையை அது சொல்கிறது. எடிட்டர் அமிர்தபஜார் பத்திரிகைக்கு போல்ஷ்விக் சார்பாக வட இந்தியாவிலிருந்து எம் அலெக்சிப் என்பவர் கடிதம் எழுதியுள்ளார். நாள் போடவில்லை. வட இந்தியா ஊர் போடவில்லை. அக்கடிதத்தில் லெனின்

அவர்கள் ஜாலியன்வாலாபாக் கொடுமையான கொலைகள் குறித்து தங்கள் பத்திரிகை வாயிலாக அறிந்து, இந்திய மக்களுக்கு தெரிவிக்க சொல்ல்லியுள்ளார். போல்ஷ்விக் அரசாங்கம் துயர் நிறைந்த இந்திய மக்கள் பக்கம் நிற்கும். அவர்களின் நியாயம் பக்கம் நிற்கும். இச்செய்தியை தாங்கள் வெளியிட வேண்டும் என அலெக்சிப் கடிதம் எழுதப்பட்டுள்ள முக்கிய செய்தியை காண்கிறோம்.

1920ல் ஆகஸ்ட் 110 அறிக்கையில் இடம் பெற்ற செய்தி :கிளாஸ்கோ சோசலிஸ்ட்டில் ஜூலையில் இந்திய கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ என்கிற நீண்ட அறிக்கை வெளியானதை , அறிக்கையை இணைத்து தெரிவித்துள்ளனர். அந்த மானிபெஸ்டோ லெனினிச வாடையில் இருக்கிற என்கிற மதிப்பீட்டை சொல்லியுள்ளனர். மானிபெஸ்டோ எம் என் ராய், அபானி முகர்ஜி, சாந்தி தேவி பெயரால் வெளியாகியுள்ளது. விடுதலை இயக்கம் பூர்ஷ்வா ஜனநாயகத்தைக் கொணரப்பார்க்கிறது. நாம் சோசலிச அரசை நிறுவுவோம்- உழுபவனுக்கு நிலம் என்பதை உறுதி செய்வோம் என்றது அந்த மானிபெஸ்டோ.

இந்த ஆகஸ்ட் 110 அறிக்கை லாலாஜி, சரோஜினி சுற்றுப்பயணம் பற்றியும், விரேந்திரநாத் சட்டோ போல்ஷ்விக் நிதியை எதிரபார்க்கிறார்- வேறு வழிகளில் நிதியும் அவருக்கு கிடைக்கிறது. அவரும் இந்தியாவில் புரட்சி என பேசி எழுதி வருகிறார்.

1920 அக் 81 அறிக்கை சொல்வது: சக்லத்வாலாவும் ராயும் தொடர்பில் இருந்து வருகின்றனர். ராய் இந்தியாவில் கம்யூனிஸ்ட் குழு ஒன்றை துவங்கி பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயல்பட சகலத்வாலா உதவவேண்டும் எனக் கேட்டு வருகிறார்.

டிசம்பர் 1920 நம்பர் 86 அறிக்கையில் வங்க மாவட்டங்களில் பிபின் பால் போல்ஷ்விக் பிரச்சாரங்களை செய்து வருகிறார். ராஷ் பிகாரி போஸ் ஆப்கானில் இருந்து செய்கிறார் என்ற செய்தியை அனுப்பியுள்ளனர். இவ்வறிக்கையில் லாலாஜி சமன்லால் இருவரும் தொழிலாளர் தலைவர்கள் என்கிற குறிப்பு சொல்லப்பட்டுள்ளது. லாலாஜியை போல்ஷ்விக் சார்புள்ளவராகவும், சமன்லால் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட்கள் தொடர்பு கொண்டவராகவும் செய்தி அனுப்பியுள்ளனர். தொழிலாளர் வேலைநிறுத்தம் அவர்களின் பிரச்சனைக்காக நடக்கின்றனவே தவிர,

ருஷ்யா நிதி பின்னணி என்பதற்கு ஆதாரமில்லை என்கிற மிக முக்கிய பதிவை உளவுத்துறையினர் செய்துள்ளனர்.

1920 பிப்ரவரி 52 ல் செய்தி ஒன்று கிடைக்கிறது. பெர்லின் கமிட்டி சட்டோபாத்யாய தாரக்நாத் தாஸ் அவர்களுக்கு நிதி அனுப்பியுள்ளார். இந்த தாரக்நாத் பிரி ஹிந்துஸ்தான் பத்திரிகை நடத்தியவர். இவருக்கு டால்ஸ்டாய் எழுதிய பதிலைத்தான் காந்தி ஓர் இந்துவிற்கு கடிதம் என 10 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிட்டிருந்தார்.

இந்திய கம்யூனிச இயக்க வரலாற்றில் 1920 ஆண்டு முக்கியமான ஒன்றாக பேசப்பட்டு வருவதால் அந்த ஓராண்டு குறிப்பை மட்டும் இங்கு சுருக்கமாக தந்துள்ளேன். நான் தேசிய அளவில் இந்த அறிக்கையில் 1920ல் வெளிநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி துவங்கப்பட்ட செய்தி என் கண்ணில் படவில்லை. இன்னும் இந்த வால்யூம்களில் தேடிப்போனால் ஏராள செய்திகள் நமக்கு கிட்டலாம்.

14-10-2024

oct 15

காந்தி ராஜாஜியை ஒப்பிட்டு வ ரா வாசகம்

வட இந்திய தலைவர்கள் பற்றிய எள்ளல் வ.ராவிடம் இழையோடும். வட இந்தியாவிலே, அறிவிலே யாருக்கேனும் அஜீரணம் ஏற்பட்டால் மலர்ச்சியை சோதிக்க தமிழ்நாட்டுக்கு உபதேச யாத்திரை புறப்பட்டுவிடுவார்கள். தமிழர் செய்த பாவம் என்னவோ- இந்த நிரந்தர தண்டனையை அனுபவிக்க வேண்டியுள்ளது. இது ஏதோ பாகபத்திர மாமூல் ஷரத்தாக ஆட்சேபனையின்றி வெகுகாலம் நடைபெற்று வந்தது. இதை அடியோடு ரத்து செய்தவர் ஆச்சாரியார் என பெருமிதம் பொங்க தமிழ்ப் பெரியவரை அவர் முன் வைப்பார்.

ஆச்சாரியாரை 'சின்ன காந்தி' எனச் சொல்வது அநியாயம் என்பார் வ.ரா. காந்தி மேதாவி. ராஜாஜி புத்திசாலி. மேதை வேறு. புத்தி வேறு. காந்திக்கு சொந்த சக்தியில் மலையை நகரச்செய்யும் நம்பிக்கை உண்டு. பிறர் சக்தியிலும் அளவற்ற நம்பிக்கை காந்திக்குண்டு. ஆச்சாரியாருக்கோ தம்மிடத்தில் சிறு சந்தேகம்; பிறரிடத்தில் எல்லையற்ற சந்தேகம்.

காந்தி தம்மை தாம் மூன்று தரம் சுற்றி வந்து , தெய்வ யானையை இந்திரனிடமிருந்து அதிகாரத்துடன் கேட்ட கணபதி போன்ற மேதாவி என்றால் ஆச்சாரியார் வியர்க்க வியர்க்க வாகனத்தில் ஏறி களைத்து அலுத்து தெய்வ யானையைப் பெறாத தேவதை.

காந்தி சாஸ்திரம் என்றால், ஆச்சாரியார் சாஸ்திரி. சாஸ்திரம் காலத்துக்கு கட்டுப்பட்டதல்ல- வளரும். சாஸ்திரியோ சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டவர். சாஸ்திரிக்கு சாஸ்திரம்தான் பிரதானம். காந்தி உலகின் மனசாட்சி. ஆச்சாரியார் அந்த மனச்சாட்சியின் மெய்க்காப்பாளர்"

அற்புதமான சித்திரத்தை , மறுக்க முடியாத ஒப்பீட்டை வரா தந்துள்ளார். காந்தியுடன் அவர் முரண்பட்ட நிலையில் ராஜாஜிக்கு நேர்ந்தவற்றை வ.ரா சொல்கிறார்.

" காந்தியின் வலது கை என்ற கீர்த்தியில் மிதந்து கிடந்த ஆச்சாரியாரின் ஜிப்பாவைக் கிழிப்பது, கல் எரிவது - தார் ஊற்றுவது என்ற நிலைமை அவருக்கு ஏற்பட்டது மிகவும் துக்ககரமானது. ஆனால் கொண்ட

கருத்துக்களுக்காக எதையும் அவதூறையும் மேற்கொள்ளமுடியும் என ஆச்சாரியார் தெளிவாக காண்பித்துவிட்டார்"

ஆச்சாரியாருடன் கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். சில விஷயங்களில் அவர் பிற்போக்குவாதிதான். ஆனாலும் அவர் முதல் தமிழன் - உயர்ந்த மனிதர் - தீர்க்காலோசனைக்காரர் என்ற வகைகளில் அவருக்கு மரியாதைக் காண்பிக்க கடமைப்பட்டிருக்கிறோம் என வ.ரா ராஜாஜி குறித்து எழுதியதை முடித்திருப்பார். அவர் மலிவுப் பிறவியல்ல எனச் சொல்லியிருப்பார்.

oct 15

என் காலத்து 'conservative' சிந்தனைகளிலிருந்து , இன்றைய ஆண் இளைஞர்களும் விடுபட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. ஆணுக்கான சிறப்பு சலுகை கோரல்கள் சற்று மட்டுப்பட்டு வருகின்றன.

அடுப்பங்கரையிலிருந்து விடுதலை என்பது பெரும் சமூக பிரச்சனைதான். 'Kitchen less Home' என்பது நனவாகிவிட்டால், அது மாபெரும் விடுதலையாகலாம்.

காலம் எப்படி குடும்பமுறைகளை மறுகட்டுமானம் செய்து சமநிலையாக்கும் என ஊகிக்க முடியவில்லை.

குடும்பம் என்கிற institution பெரும் சமூக பழக்கமாகியுள்ளது. அதுதான் சாதி, மதம், கம்யூனிட்டி பழக்கம் , சடங்கு முறைகள், சொத்து பத்து நிர்வாகம் என அனைத்திற்கும் அடிப்படையாக நிற்கிறது. கூட்டு குடும்பங்கள் சாத்தியமில்லை என்கிற பொது புத்தியும், உணர்வும் நன்றாகவே நடைமுறைக்கு வந்துவிட்டன. ஆனாலும் குடும்பங்கள் கிளைகளாகப் பிரிந்து இன்னும் நியுக்ளியர் குடும்பமாக இருக்கின்றன.

மேற்கின் பழக்கங்களும், இந்திய சமூக பழக்கங்களுமான கலவையாக புதிய தலைமுறை வளர்ந்து வருகிறது. வேர் அறிந்தவர்களாகவும் radical ஆகவும், கேள்விகளால் துளைக்கக்கூடியவர்களாகவும் இளம் தலைமுறையினர் வளர்ந்து வருகின்றனர். அவர்களின் புரிந்துகொள்ளும் ஆற்றல் அபாரமாக இருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர், மேடம் திலகவதி அவர்கள் போலீஸ் துறையில் தலைமை பொறுப்பில் இருந்தபோது gender sensitisation முகாம்களை நடத்தினார். நாகை எஸ் பி அப்பகுதியில் இன்ஸ்பெக்டர்- சப் இன்ஸ்பெக்டர்களுக்கு நடந்த பயிற்சிக்கு உரையாளராக என்னையும் அனுப்பியிருந்தார். திருச்சியில் இப்படி உரையாளர்களிடம் எதிர்பார்க்கப்படுவது என்ன என்பதற்கும் தனி முகாம் நடந்த நினைவும் வருகிறது.

oct15

Com Dange, Com O P Gupta some of our great minds of TU Movement taught us

"The attribute of a TU Movement should be to get best results with least expenditure of energy. "

The judicious understanding of what amount of energy for what purpose- however basis the purpose may be- is gauged as per the maturity of the leadership that guide the movement

o P Gupta our exemplary leader suffered himself more than allowing the workers he led to suffer by undertaking indefinite fasts like Gandhi.

There is a misunderstanding that militancy is directly proportional to the amount of energy spent, but it is beautifully correlated with the least expenditure of energy spent

oct 17

பணிக்கு திரும்பும் சாம்சங் தொழிலாளர்க்கு நல்வாழ்த்துகள்

என் வாழ்த்துகளை சம்பந்தப்பட்ட தொழிலாளரோ அவர்களின் தொழிற்சங்க தலைவர்களோ பார்ப்பார்களா எனக்கூட நான் அறியேன். கொஞ்சம் தொழிற்சங்க அனுபவம் பெற்ற வகையில் ஏற்பட்ட பழக்கம் எழுத வைக்கிறது.

வேலை - உழைப்பு என்பதுதான் மனிதனை கண்ணியமிக்கவனாக்குகிறது. வேலையின்மை என்பது ஒருவகை economic death sentence ஆகிறது. இந்த வகையில் போராட்டம் முடிந்து அத்தொழிலாளர் வேலைக்கு மீண்டும் செல்வது மிக முக்கியமான ஒன்று. நல்வாழ்த்துகள்.

அக்டோபர் 15, 2024 ல் பேச்சு வார்த்தை இறுதிநிலையை அடைந்து , நிருவாகத்தினர்- தொழிலாளர் தரப்பு இரு சாராருக்கும் தமிழ்நாடு லேபர் கமிஷனர் அறிவுரை தரப்பட்டு ஏற்கப்பட்ட சூழல் உருவான நிலையில் போராட்டம் முடிவிற்கு வந்தது.

அந்த 4 அறிவுரையின் சாராம்சத்தை தமிழக அமைச்சர் குழுவினர் தங்கள் ட்விட்டர் பக்கத்தில் (கையெழுத்து இல்லா நகலை) வெளியிட்டிருந்தனர். சம்பந்தப்பட்ட தொழிற்சங்க பிரதிநிதிகள் பேட்டியிலும் அந்த 4 அம்ச அறிவுரைகள் இருதரப்பினராலும் ஏற்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. கையெழுத்திடப்பட்ட அதிகாரபூர்வ நகலை என்னால் பார்க்க இயலவில்லை.

போராட்டக்காலத்தில் அடக்குமுறைகளை தொழிலாளர் சந்திக்க நேர்ந்தது, தொழிற்சங்க பதிவு தாமதம், தமிழக அரசின் செயல்பாடுகள், சாம்சங் நிறுவனம் குறித்து என பல விமர்சனங்கள் எழுந்தன. எதிர் விமர்சனங்களும் எழுந்தன. அவரவர் உணர்வு , பெறப்பட்ட விவரங்கள் அடிப்படையில் இந்த விமர்சனங்களின் உஷ்ணங்கள் இருந்தன.

'நீ தான் வெளியாள் நீ வெளியே போ', 'தொழிற்சங்கம் அமைக்க இங்கு உரிமை இல்லையா', 'சாம்சங் பொருட்களை பகிஷ்கரிப்பீர்' , 'அரசு சாம்சங் ஏஜெண்ட்டா', 'நீங்கள் தொழிற்சங்கம் வைத்தால் அவ்வளவுதான் மூடிட்டுதான் விடுவீங்க' , 'தொழில் முதலீடுகள் அவ்வளவுதான் எவன் வருவான்' என்கிற அளவும் கூட விமர்சனங்கள் உச்சமாயின.

சாம்சங் தொழிலாளர்கள் விரும்பி தங்களுக்கான தொழிற்சங்கமாக சாம்சங் இந்தியா தொழிலாளர் சங்கம் என்ற ஒன்றை சி அய் டி யு வழிகாட்டலில், அதன் அங்கமாக கடந்த ஜூன் 16 , 2024ல் அமைத்துள்ளனர். நான் இங்கு குறிப்பிடும் தேதிகள் சி அய் டி யு கடிதம் அய் எல் ஓக்கு எழுதியதில் சொல்லப்பட்ட தேதிகள். சாம்சங் இந்தியா ஒர்க்கர்ஸ் யூனியன் எஸ் அய் டபிள்யு யு என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தொழிற்சங்க பதிவிற்கான விண்ணப்பத்தை , சங்கம் தொடங்கி 10 நாட்களில், ஜூன் 26 2024ல் அனுப்பியுள்ளனர். அவர்களின் அந்த நகல் காப்பியை என்னால் பார்க்க இயலவில்லை. அதில் 'சாம்சங் இந்திய தொழிலாளர் சங்கம்' அல்லது Samsung India workers Union எதன் பெயரில் பதிவு கோரினர் என எனக்கு தெரியவில்லை.

சங்கம் தொடங்கி 25 நாட்களில் , ஜூலை 11, 2024ல் தங்களின் 20 அம்ச கோரிக்கைகளை நிர்வாகத்திற்கு அனுப்பினர்.

45 நாட்களில் பதிவை ரிஜிஸ்ட் ரார் செய்யவில்லை என்கிற நிலையில் , பதிவு குறித்த தாமதத்தை எதிர்த்து செப்டம்பர் 20 , 2024 ல் நீதிமன்றம் சென்றனர். அவர்களின் பிரேயர் குறித்த முழு வழக்கு விவரம் எனக்கு தெரியவில்லை. பத்திரிகையில் பார்த்த செய்திப்படி ரிஜிஸ்ட் ரார் தரப்பும் தொழிலாளர் தரப்பும் பேசி இணக்கம் கொணர நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டனர். அந்த நீதிமன்ற வழிகாட்டுதலின் அதிகாரப்பூர்வ நகலை என்னால் பார்க்கமுடியவில்லை. இது பொதுச்செயலர் (எல்லன்) போட்ட வழக்கு என்பது பத்திரிகை செய்தி.

அடக்குமுறை ஆட்கொணர்வு மனு ஒன்றை அதன் தலைவர் முத்துக்குமார் போட்டார் என்கிற பத்திரிகை செய்திப்படி, தமிழக அரசிடம் விளக்கம் கேட்கப்பட்டு ஆட்கொணர்வு வழக்கு தள்ளுபடியானதாக சொல்லப்பட்டுள்ளது.

ஜூன் 16ல் சங்கம் அமைத்தல், ஜூலை 11ல் 20 அம்ச கோரிக்கைகள் வைத்தல், ஆகஸ்ட் 19 ல் வேலைநிறுத்த அறிவிப்பு என அதி விரைவாக தொழிலாளர் செயல்பட்டுள்ளனர். அவர்களின் துன்ப துயரங்கள் இந்த அவசரத்தை அவர்களுக்கு கொடுத்திருக்கலாம். அடுத்த 20 நாட்களில் , சங்கம் தொடங்கிய 3 மாதத்திற்குள் அஞ்சாமல் வேலைநிறுத்தத்தில் இறங்கி 37 நாட்கள் நின்று தங்களின் சக்தியை அவர்கள் காட்டியுள்ளனர்.

தொழிற்சங்கத்திற்கு புதியவர்கள், மூன்றுமாத தொழிற்சங்க பழக்கம் கூட ஆகாத நிலையில் அவர்கள் எழுச்சி பெற்றது பெரும் விடயம்தான். அதுவும் unregistered union என்கிற அளவில் நின்றதும் முக்கியமான அம்சம்தான். அதேநேரத்தில் தொழிற்சங்க வாழ்க்கையில் spontaneous emotional standing என்பதற்கும் conscious sustainable standing என்பதற்கும் வேறுபாடு உண்டு என்பது தேவைப்படுகிற முக்கிய புரிதல்.

செப்டம்பர் 9 முதல் வேலைநிறுத்தம் நடந்த காலத்தில் , அமைச்சர் தரப்பில் பத்திரிகையில் வந்த செய்திப்படி 8 முறை பேச்சுவார்த்தை நடந்தது என்கிறார்கள். கூட்டக்குறிப்பு வெளியிட்டார்களா எனத்தெரியவில்லை.

அக்டோபர் 7 அன்று தமிழக அரசு மத்திய அரசின் industrial code குறித்து வெளியிட்ட கெசட்டின் ஷரத்தைப் பயன்படுத்தி (பல பிரிவினர் பெண்) உட்பட ஒர்க்ஸ் கமிட்டி ஒன்றை சாம்சங் இந்தியா நிர்வாகம் அமைத்து அவர்களுடன் உடன்பாடு போட்டதாக தெரிவித்தனர். அமைச்சர் குழுவும் கோரிக்கைகள் ஏற்கப்பட்டுவிட்டன, பதிவு கோரிக்கை நீதிமன்ற தீர்ப்பின்படி ஏற்கப்படும் என அறிவித்தனர்.

போராட்டத்தில் இருந்த தொழிலாளர் இதை விமர்சித்து நிராகரித்தனர். ஒர்க்ஸ் கமிட்டியில் இருந்தவர் கோரிக்கை பட்டியல் என்று கொடுத்தனர், எந்த நாளில் ஒர்க்ஸ் கமிட்டியை நிர்வாகம் அமைத்த கடிதம் வெளியிட்டது என எனக்குத் தெரியவில்லை. ஒர்க்ஸ் கமிட்டியினர் கொடுத்த கோரிக்கையில் எவை ஏற்கப்பட்டன , நிராகரிப்பு எவை என நாடகபாணியிலாவது ஏதாவது நடந்ததா தெரியவில்லை.

அமைச்சர் குழுவோ , ஒர்க்ஸ் கமிட்டி உறுப்பினர்களோ, சாம்சங் நிர்வாகமோ அந்த ஒர்க்ஸ் கமிட்டியில் போராடும் தொழிலாளர்களிடமிருந்து சிலரை இணைத்திருக்க முயற்சி ஏன் எடுக்கவில்லை எனத்தெரியவில்லை. போராடுவார் ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம் என்பது வேறு. ஒர்க்ஸ் கமிட்டி அமைக்க ஏதாவது வழிகாட்டுதல்களை சாம்சங் இந்தியா வைத்துள்ளதா எனத் தெரியவில்லை.

அக்டோபர் 15 அன்று 4 முக்கிய அறிவுரைகள் தரப்பட்டு இரு தரப்பினரும் ஏற்றுள்ளனர். ஏற்கப்பட்ட அறிவுரைகள்

தொழிலாளர் தரப்புக்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகள்:

தொழிலாளர் உடன் பணிக்கு திரும்பவேண்டும்.

பணிக்கு திரும்பி நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு தரவேண்டும். நிர்வாகத்திற்கு எதிராக எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது

நிர்வாகத்திற்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகள்:

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக மட்டும் எவ்வித பழிவாங்கும் நடவடிக்கையும் எடுக்கக்கூடாது.

தொழிலாளர் முன்வைத்த ஊதிய உயர்வு மற்றும் பொது கோரிக்கையின் மீது எழுத்துபூர்வமாக பதிலுரையை சமரச அலுவலர் முன்பு தாக்கல் செய்ய வேண்டும்.

கையெழுத்திட்ட பிரதியை நான் பார்க்காததால், அல்லது இதுவரை பொதுவெளியில் வெளியிடப்படாமல் இருப்பதால், தொழிலாளர் தரப்பில் அவர்கள் சங்கம் பெயரில் சார்பில் கையெழுத்திட்டுள்ளனரா அல்லது எவ்வாறு என என்னால் அறிந்துகொள்ளமுடியவில்லை.

வேலைநிறுத்தம் என்ற ஒன்றிற்காக பழிவாங்குதல் இல்லை என்பதற்கு பொருளாக , கடந்த 37 நாட்களுக்கும் சம்பள வெட்டு இல்லை என்பதையும் சாம்சங் இந்தியா ஏற்றுக்கொண்டார்களா எனத்தெரியவில்லை. நல்லெண்ண அடிப்படையில் சம்பளம் கொடுக்க ஏதாவது மெக்கானிசம் இருந்தால் அது தொழில் அமைதிக்கு கூடுதல் வழிவகையாக அமையும்.

அக்டோபர் 15 அறிவுறுத்தலில் , ஒர்கஸ் கமிட்டி உறுப்பினர்களுடன் போடப்பட்டதாக சொல்லப்படும் அக்டோபர் 7 ஒப்பந்தம் செல்லாது என்றோ, நிறுத்தி வைக்கப்படும் என்றோ எதுவும் சொல்லப்படவில்லை. இந்த சூழலில் ஒர்க்ஸ் கமிட்டி உடன்பாட்டில் மாதம் ரூ 5000 ஊதியத்துடன் இன்செண்டிவ் உட்பட சொல்லப்பட்டவைகளை நிர்வாகம் அமுல்படுத்தப் போகிறதா என்ன என்பது இனித்தான் தெரியவேண்டும். போராடிய தொழிலாளர் , உடன் வரக்கூடிய பலன் இருந்தால் அதை மறுப்பார்களா எனவும் தெரியவில்லை.

விரைவில் தொழிற்சங்க பதிவு நடந்து , புதிய கோடில் உள்ள தமிழக கெசட்டில் உள்ள அங்கீகார விதிப்படியோ அல்லது சாம்சங் நிர்வாகம் சொல்லும் procedures படியோ அங்கீகாரமும் கிடைத்து அத்தொழிலாளர்

கண்ணியமான உரிமைகளுடன் தங்களுக்கான உழைப்பை நல்கி சீராக வாழ்ந்திட நல்வாழ்த்துகள்!

17-10-2024 R. Pattabiraman

#samsung

oct 18

மாவோ ஆட்சி பொறுப்பேற்றபின்னர் பேசிய ஏதோவொன்றை பார்க்க நினைத்தபோது , நான் பார்த்த நூலில் பிப்ரவரி 27 , 1957 உரை ஒன்றை படித்தேன். அந்த உரைக்கு on the correct handling of contradictions among the people என தொகுப்பாளர்கள்- அவர் பேசிய மய்யக் கருத்தை மனதில் வைத்து பெயரிட்டுள்ளனர்.

அப்போது சீனாவில் 60 கோடி மக்கள் இருந்துள்ளனர். நாட்டின் ஒற்றுமை, பல்வேறு தேசிய இனங்களிடம் ஒருமைப்பாடு, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்கள், அதிகார நிலையில் இருப்பவர்களைக்கொண்டு சோசலிசம் கட்டுதல் போன்ற பெரும் சவால்களை புரட்சிக்குப் பின்னரான இளம் சீனா (1949ல் மாவோ ஆட்சிக்கு) சந்தித்து வருவதை மாவோ உரையில் குறிப்பிட்டிருந்தார்.

மாவோ முரண்பாடுகள் குறித்து விரிவாக பேசியவர். இங்கும் அவர் இருவகை முரண்களை நாம் சந்திக்கிறோம் என விளக்கினார். அவற்றை சோசலிச கட்டுமானத்தை தடுக்கும் எதிரிகளுடனான முரண்பாடு, மக்கள் தங்களுக்குள்ளான முரண்பாடு என அவர் புரிந்து விளக்கினார்.

சில நேரங்களில் நம் ஊர் பெரியார் போல மாவோ பட்டென பேசுவார். இப்படி ஒப்பீடு செய்வதால் எவரும் வருந்த வேண்டாம். இருவரும் அவரவர்க்கான புகழ் எல்லைகளை , விமர்சன எல்லைகளை கொண்டவர்கள். மக்கள் என்றால் எதிரி என்றால் யார்ப்பா எனக்கேட்டு விளக்கமும் அவர் சொல்லியிருப்பார். கால ஓட்டத்தில் மக்கள் என்பதின் பொருளும் மாறிக்கொண்டே வருகிறது. இப்போது நம் வரையறையில் மக்கள் என்றால் எவர் எல்லாம் , எந்த தட்டினராலும், சோசலிச கட்டுமானத்திற்கு நிற்கிறார்களோ அவர்கள் மக்கள். மற்றவர் எதிரி.

மக்கள் என்று நாம் சொன்னவரையறை கொண்டவர்களிடம் முரண்பாடுகள் வராதா- வரும் ஆனால் அவை பகையற்ற முரண்பாடுகள். எதிரி என நாம் சொல்பவரிடம் பகை முரண்பாடு. இரண்டையும் ஒரேவிதமாக நாம் கையாளக்கூடாது என அவர் சொல்லிக்கொடுத்திருப்பார்.

இந்த முரண்பாடுகளை நடைமுறையில் கையாளும்போது ஏராள கோளாறுகள், எதிர் விளைவுகள் அங்கு நடந்தது பற்றி தனி ஆய்வுகள் வராமல் இல்லை. அது தனி ஸ்டோரி.

தொழிலாளர் தங்களிடையே கொள்ளும் முரண்பாடுகள் , விவசாயிகள் , அறிவுஜீவிகள், தேசிய முதலாளிகள் இதுபோல மக்கள் பிரிவினர் இடையில் ஏற்படும் முரண்பாடுகளை அரசாங்க உத்தரவு போட்டு நிர்ப்பந்தப்படுத்தி தீர்த்தால் எதிர் விளைவுகள் உருவாகலாம் என இவ்வுரையில் மாவோ எச்சரித்து கவனப்படுத்தினார்.

குறிப்பாக சமூகத்திற்கு பொதுகேடுகள் விளவிக்காத மத நம்பிக்கைகளில் உத்தரவெல்லாம் போட்டு மக்களை கட்டுப்படுத்த வேண்டாம் என்றார். மக்களுக்கு சுதந்திரமான பேச்சு, பத்திரிகை சுதந்திரம், கூடுகை, ஊர்வலம், ஆர்ப்பாட்டம் போன்றவற்றை அனுமதிக்க வேண்டும். அவை எதுவும் சோசலிச கட்டுமானம் என்கிற பொது எல்லைக்குள் என்ற புரிதலுடன் சமநிலையாதலை மாவோ அதிகாரத்திற்கு வந்த தோழர்களிடம் புரிய வைக்க முயற்சித்தார்.

இவ்வுரையில் people's democratic dictatorship என்கிற 1949 முதல் அவர் சொல்லி வந்த பதத்தை திரும்ப விளக்குவார். மக்களிடம் அரசு மிக ஜனநாயகமாக நடத்தல், எதிரிகளிடம் சர்வாதிகாரம் என்பார். மக்களிடம் அரசு தொடர் விவாதம் , பொறுமையுடன் ஏற்கச் செய்யும் முறையை கையாளும் என அவர் சொல்லிக்கொடுத்தார். எதிரி என எவரை வேண்டுமானாலும் முத்திரை குத்திவிடலாம், அதற்கான அதிகார கட்டுப்பாடுகள் எல்லைகள் counter balances என்பதெல்லாம் சிக்கலான விஷயங்கள்தான்.

எங்கும் எப்போதும் ஆள்வோரின் கருத்துக்களே உலாவும் கருத்துக்கள் என மார்க்ஸ் சொன்னதை, நாம் வெறும் அரசாங்க மட்டத்துடன் விட்டுவிடாமல், சற்று நகர்த்தி இழுத்தால் அது தொழிலகம், அலுவலகம், ஊர், பள்ளிக்கூடம், கட்சி, பிற அமைப்புகள், வீடு என அமையும்.

மாவோ பளிச்சென பேசக்கூடியவர். Unity of opposites பற்றி அவர் விளக்கும்போது , 1937ல் இப்படிக்கூட பேசியுள்ளார். அரசதிகாரம் பெறுவதே அரசை உதிரச் செய்யத்தான் என மார்க்ஸ் பேசியதை நாம் அறிவோம். அதை சீன கட்சிக்கும் நகர்த்திப் பார்த்து மாவோ சொன்னார். நடைமுறையில் அரசு உதிர்தல், கட்சி உதிர்தல் என்பதற்கான எந்த

அறிகுறிகளும் இதுவரை அங்கில்லை. பலமாதல், மேலும் அதிகாரப்படுத்திக்கொள்தல் என்ற திசைதான் தென்பட்டது என்பதையும் உணரமுடியும்.

மாவோ கட்சி உதிர்தல் என்பதை 1937 க்கு முன்னரே முரண்பாடுகள் என்கிற அவரது விளக்கத்தில் பேசினார். காந்தி கூட விடுதலை நெருக்கத்தில் 1947 ஆக்ஸ்டில்தான் காங்கிரஸ் உதிர்தல் - அதாவது காங் தன்னை கலைத்துக்கொண்டு சேவா சங்கமாக தகவமைத்தல், அதிகாரப்படுத்திக்கொள்ளாமல் - மக்கள் படுத்திக்கொள்வது சேவை தொண்டர்களாக்கிக் கொள்வது எனப் பேசினார். அதை நேரு படேல் உட்பட எவரும் ஏற்கவில்லை. காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்தில் தன்னை பலப்படுத்திக்கொண்டு அதன் வழி மக்களுக்கு அதிகாரத்தை நல்வாழ்வை மெல்லக் கடத்துதல் என்ற வழியை எடுத்து நகர்ந்தது.

மாவோ எதிர்மறைகளின் ஒற்றுமை என வேறு contextல் கட்சி உதிர்தல் என்பதை தத்துவ பிரச்சனையாக பேசினார். அதாவது மக்கள் சுய அதிகாரத்தை பெற்றுவிட்டால் அவர்களே தங்களை வழிநடத்திக்கொள்வர் என்கிற அனார்க்கிச புள்ளியில் மாவோவும் காந்தியும் சந்திப்பர். மாவோ வரிகள் சற்று தடால் வரிகளாக தெரியலாம். ஆனால் இலட்சியம் என்பதால் அது தூரமாக இருக்கத்தானே செய்யும் என்கிற புரிதலில்..

To establish and build the Communist Party is in fact to prepare the conditions for the elimination of the Communist party and all political parties. To build a revolutionary army under the leadership of communist party and to carry on revolutionary war is in fact to prepare the conditions for the permanent elimination of war. These opposites are at the same time complementary

எளிமையாக புரிந்து கொள்ளவேண்டுமானால், யுத்தமே நிரந்தரமாக வரக்கூடாது என்பதற்காக நாம் ஆயுதம் இன்று ஏந்துகிறோம். இனி போராட்டமில்லா பெருவாழ்வு அமைக்க இன்று போராடுகிறோம் , கட்சியற்ற வாழ்க்கை ஒன்றிற்காக இன்று கட்சி அமைக்கிறோம் என இதை சற்று நீட்டி புரிந்துகொள்ளலாம். இப்படித்தான் ஒவ்வொரு நாடும் யுத்தம் பற்றி இன்று பேசிக்கொண்டிருக்கின்றன.

சீனாவில் பிற அரசியல் கட்சிகள் ஒழிக்கப்பட்டன என்பது நடந்தேறியதே தவிர மாவோ பேசிய சீன கம்யூனிஸ்ட் கட்சி உதிர்தல் என்கிற இலட்சியப்

பயணத்தில் அவர்கள் மேலும் ஆட்சி அதிகாரங்களை பல மடங்கு பலப்படுத்திக்கொண்டு, உலகமே சற்றாவது அச்சப்படும் நிலையை கடந்த 75 ஆண்டுகளில் உருவாக்கியுள்ளனர்.

Theory and practice பெரும் சிக்கலான விஷயமாக ஒவ்வொரு தனிநபருக்கும்கூட இருந்தே வருகிறது. Double standards என்பதிலிருந்து ஒருவர் தன்னை விடுவித்துக்கொள்ளும் போராட்டம் பெரிதாகவே இருக்கிறது.

18-10-2024

oct 19

நூறு பூக்கள் பூக்கட்டும், நூறு சிந்தனைகள் மலர்ந்து முட்டி மோதட்டும்- மாவோ

நாட்டிற்கும், ஏன் ஒவ்வொரு அமைப்பிற்கும் அறிவுஜீவிகளும் தேவைப்படுவர். அவர்கள் பொதுவாக எண்ணிக்கையில் மிகக்குறைவாக இருப்பர். பல நேரங்களில் இவர்களும் கேலி கிண்டல் நையாண்டிக்கு உள்ளாக்கப்படுவர். சமீபத்தில் அர்பன் நக்சல் எனக்கூட இவர்களில் சிலர் நம் நாட்டில் முத்திரை குத்தப்பட்டு பெரும் அவதிக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இவர்களை கையாள்வது என்பது பலநேரங்களில் ideological என்பதாகவும் அமையக்கூடும். பெரும்பாலும் அவர்கள் mental workers- also Educators. இந்த educators க்கும் தொடர் கற்றல் அவசியமே. கற்றது போதும் என அவர்கள் எந்த அமைப்பிலும் ஒப்பேற்றல் கூடாது என மார்க்சைப்போலவே மாவோவும் சொன்னதைப் பார்க்கிறோம்.

எதை பிறருக்கு உபதேசிக்கிறோமோ அதை நாம் செய்கிறோமா என்பதில்தான் ஒருவரின் remoulding தொடங்குகிறது. எளிமையாக இரு, நேர்மையாக இரு, கடுமையாக உழை, தன்னலமற்று இரு, நியாயம் கேள் , பணத்தாசை கொள்ளாதே, துன்பத்தை எதிர்கொள்- துவளாதே , சாதி மதம் பார்க்காதே என்பதெல்லாம் சொல்லிக்கொடுக்க மட்டும்தானா, இல்லை அவரவர் மட்டத்தில் அனுசரிப்பதற்கானவையா என்பதிலும் ஒருவரின் remoulding தொடங்குகிறது.

எதையாவது சொல்லப்புகுமுன், அதை ஓரளவிற்காவது தெரிந்து சொல்கிறோமா, அனுசரிக்க முடிந்துள்ளதா என்ற கேள்வி educators என நினைப்போர் மத்தியில் வருகிறதா ? காந்தி தொந்திரவு செய்யுமிடம் இது.

மாவோவிற்கும் இந்த பிரச்சனை ஏற்பட்டது. புரட்சிக்கு பின்னரான சோசலிச கட்டுமானத்தில் சீனாவில் உள்ள அறிவுஜீவிகளை கையாள்வது எப்படி- கட்சியில் இருப்போர் - கட்சியில் இல்லாதவர் என்கிற அந்த மிகச் சிறுபான்மையை எப்படி புரிந்துகொள்வது, ஏற்பது- சரிசெய்வது- நிராகரிப்பது என்பது குறித்து அணிகளிடம் அவர் சிந்தனை சொற்பொழிவை மார்ச் 12, 1957ல் ஆற்றினார். சில balanced வழிகாட்டல்களை அணிக்கு கொடுத்தார்.

60கோடியளவில் இருந்த சீனர்களில் , மாவோ அரசாங்க உத்தேச கணக்கெடுப்புப்படி 50 லட்சம் அறிவுஜீவி தட்டினர் இருந்தனராம். இவர்களில் 90 சதத்திற்கு மேல் அரசாங்கம் எடுக்கும் சோசலிச கட்டுமான திட்டங்களுக்கு ஆதரவு தந்தவர்கள். 3 சதம் சோசலிசம் குறித்து கடுமையான விமர்சனங்களை வைத்துக்கொண்டிருந்தனர் என்றும், இவர்கள் எதிர்புரட்சிக்குரிய சாதக சூழலை உருவாக்கவும் அதற்காக காத்தும் கிடப்பவர்கள், இவர்களால் ஏதும் செய்யவியலாது என்றாலும் கண்காணிப்புக்குரியவர்கள் என மாவோ குறிப்பிடுகிறார். மீதமுள்ள அந்த 90க்கும் மேற்பட்ட பகுதியில் மார்க்சிசத்தில் ஊறி தேர்ந்தவர் என 10 சதம் இருக்கலாம். மேலும் பெரும்பகுதி மார்க்சியம், சோசலிசம் குறித்த கற்றலில் ஈடுபட்டுக்கொண்டு வருபவர்கள். நாம் அவர்களில் resolute-wavering- antagonist என பாகுபடுத்தி சரியாக புரிந்துகொண்டு கையாளவேண்டும் என்கிற சிந்தனையை மாவோ வெளிப்படுத்தினார்.

மார்க்சியம் அறியாத ஆனால் குறைகாண முடியாத தேசப்பற்றாளர்களும் இருக்கிறார்கள்.இவர்களுடன் பொறுமையாக விவாதம் செய்துதான் ஏற்பினை கொணரவைக்கமுடியும். நாத்திகர்- ஆத்திகரும் இருப்பர். மார்க்சியம் அனைவரும் கற்றாக வேண்டும் என மக்களின் எந்த பிரிவினைரையும் நமது அரசு நிர்ப்பந்திக்க கூடாது. அது எதிர் விளைவுகளைக்கூட தரலாம். நூறு பூக்கள் பூக்கட்டும், நூறு சிந்தனைகள் மலர்ந்து முட்டி மோதட்டும் - ஆனால் சோசலிச கட்டுமானம் என்பது எல்லை என மாவோ அப்போது பேசிவந்தார்.

கட்சி 'to open wide or restrict ' இதில் எதை கடை பிடிக்க வேண்டும் என்கிற வந்தபோது அவர் to restrict எனப்பேசியவர்களை நிராகரித்து 'to open wide ' என்பது 'பாலிசியாகட்டும்' என சொல்லித்தந்தார்.

சோசலிச கட்டுமானம் கட்சித்தோழர்களால் மட்டும் நடத்தப்படக்கூடிய ஒன்றல்ல. அந்த இராட்சத பெரும் வேலை நாட்டின் பெரும்பாலான கட்சியல்லாத மக்களின் ஒத்துழைப்பால் , அன்றாட பணிகளால் நடத்தப்பட வேண்டிய ஒன்று என்கிற அடக்கமான உணர்வு தேவை என அவர் அந்த மார்ச் 1957 உரையில் தெளிவுபடுத்தினார்.

மார்க்சிசம் குறித்து விமர்சனம் வந்தால் அச்சப்படவேண்டாம். எதிர்கொள்க என வேறு ஒருமுறை அவர் பிப் 1957ல் உரையாற்றினார். அவ்வரிகள் கீழே தரப்பட்டுள்ளன.

This spoke com Mao

Hundred flowers blossom and a Hundred Schools of Thought content

Marxism is scientific truth and fears no criticism. People may ask (China after 8 years revolution 1957) , since Marxism is accepted as the guiding ideology by the majority of the people in our country, can it be criticised? Certainly it can.

If it could be overthrown by criticism, it would be worthless.

Marxists should not be afraid of criticism from any quarter.. quite contrary they need to temper and develop themselves and win new positions in the teeth of criticism and stress of struggle.

Fighting against wrong ideas is like vaccinated- a man develops greater immunity from disease.

Both Han chauvinism and local nationalism are harmful to the unity of nationalities

Ideological struggle is not like other forms of struggle. The only method used in this struggle is that of painstaking reasoning and not crude coercion

Carrying out the policy of letting a hundred flowers blossom and a hundred schools of thought content will not weaken but strengthen the leading position of Marxism in the ideological field.

It is only by employing the method of discussion, criticism and reasoning that we can foster correct ideas …

19-10-2024

oct19

அன்று வியாழக்கிழமை- 4-6-1970 தொட்டியம் கூட்டம் பெரியார் பேசினார்.

அம்பேத்கர் இயக்கங்களின் சார்பில் அவரது பிறந்த நாள் கூட்டமது. அம்பேத்கரின் சிறப்பை, தன்னுடன் ஆன நட்பை பெரியார் பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறார். இந்து மதம் , சாதி மீதான அம்பேத்கரின் கூர்மையான விமர்சனங்களையும் பெரியார் சொல்கிறார்.

வட்டமேஜை மாநாடு - தனித் தொகுதி- காந்தி உண்ணாவிரதம் , சமரசம் பற்றி அவர் பேசும்போது , அவரது உரையில் கீழ்கண்ட வாசகங்களும் இடம் பெற்றுள்ளது. அவரது இந்த அம்பேத்கர் பிறந்த நாள் தொட்டியம் உரையை விடுதலை 19-6-1970 ல் வெளியிட்டது.

“ நான் அம்பேத்கரைக் கேட்டேன்- ஏன் தனித் தொகுதி கோரிக்கையினை விட்டுவிட்டீர்கள், இன்னும் கொஞ்ச நாள் இருந்தால் கொடுத்திருப்பானே என்று. அதற்கு அவர் “ என்னைக் கொலை செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டார்கள். நான் இந்த விகிதாச்சாரத்திற்கு ஒப்புக்கொள்ளாமல் தனித்தொகுதிதான் வேண்டுமென்று சொல்லியிருந்தால், நிச்சயம் என்னைக் கொலை செய்திருப்பார்கள். நான் சாவைக் கண்டு அஞ்சவில்லை. என்றாலும் பிறகு இந்த விகிதாசார உரிமையும் கிடைக்காமல் போய்விடும் என்று பயந்துதான் ஒப்புக்கொண்டேன்” என்றார். அதன் பயனாக அந்த சமுதாயம் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறது”

மேற்கண்ட அவரது உரையில் காணப்படும் இந்த பத்தி ஆசிரியர் வீரமணி அவர்கள் தொகுத்துள்ள “ பெரியார் - அம்பேத்கர் நட்புறவு ஒரு வரலாறு” என்பதில் பக் 242ல் இடம் பெற்றுள்ளது.

oct 21

'இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று குறிப்புகள்' என்கிற கச்சிதமான நூல் 1976 ல் தமிழில் கொணரப்பட்டது. இ.க.கவின் 50 ஆண்டுகளையொட்டி ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு வந்த நூல். இந்திய இடதுசாரிகளின் எழுத்து கிடங்கில் இருக்கின்ற முக்கிய நூலாக இதைக் குறிப்பிடலாம். 237 பக்க நூல்தான். சிலமணிநேரம் செலவு செய்யக்கூடிய எவரும் படித்துவிடமுடியும்.

1917 அக்டோபர் புரட்சி தாக்கம் தொடங்கி 1964 ல் இயக்கம் சிபிஅய்- சிபிஅய் எம் என பிளவு நேர்ந்த காலம் வரையிலான வரலாறு , சிறு குறிப்புகளாக இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இயக்க வரலாறு அறிந்த மூத்தவர்கள் இந்நூலை பலமுறை படித்திருக்கக்கூடும்.

காலப்பகுப்பாக 1917-29, 1929-41, 1942-51, 1951-64 என்று வகைப்படுத்திக்கொண்டு சோவியத் தாக்கம், கோமிண்டர்ன், காங்கிரஸ் இயக்கம்- காந்தி, எம் என் ராய் உள்ளிட்ட வெளிநாடு வாழ் மூத்தவர் செயல்பாடுகள், நேரு சுபாஷ் உள்ளிட்ட காங் இடது பிரிவு, காங் சோசலிஸ்ட்கள், பிரிட்டிஷ் ஆட்சி அதிகார அடக்குமுறைகள், தொழிலாளர் விவசாயி போராட்டங்கள், மாணவர் பெண்கள் இயக்கங்கள், இப்டா மேடை என்கிற சூழல்களுடன் கட்சியின் ஊடாட்டம் பின்னப்பட்டு இவ்வரலாற்று பிரதி குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.

கட்சி அமைத்தல் சிந்தனைகள் - ஆங்காங்கு குழுக்கள் என்பதிலிருந்து முழு நேர கட்சி உருவாதல் என்கிற பரிணாமம் சொல்லப்பட்டுள்ளதை வாசிப்பவர் உள்வாங்கமுடியும்.

வெளிநாட்டில் தாஷ்கண்டில் 1920 அக்டோபர் எழுவர் முயற்சி, இந்திய நகரங்களில் சோவியத் புரட்சி , மார்க்சிய தாக்கத்தில் , வெளிநாடுகளிலிருந்து வந்து போனவர், தங்கி பணியாற்றியவர், தொடர்புகள், இரகசிய செயல்பாடு, தொழிலாளர்விவசாயி கட்சி அமைத்தல், 1925 டிசம்பரில் நேரிடையாக கம்யூனிஸ்ட் கட்சியை நாட்டிற்குள்ளாக அமைத்து நாட்டு மக்களுடன் செயல்படுதல் , அப்படி துணிச்சலாக முன்வந்த அன்றைய இளைஞர்கள், இன்று நூற்றாண்டைக் கண்ட

மூத்தவர்களின் செயல்பாடுகள்- நேர்ந்த தவறான புரிதல்கள், வளர்ந்த சோவியத் பிரிட்டிஷ் சீன கட்சியின் இடித்துரைப்புகள் என நகர்ந்த ஆரம்ப ஆண்டுகள்.

கோமிண்டர்ன் உடன் உறவென்ன, இணைப்பா, அறிவுரைகளை எந்த அளவில் எடுத்துகொள்வது- போடப்பட்ட கான்பூர் மீரத் சதி வழக்குகளை சந்தித்து மீளல், பிரதான காங்கிரசுடன் உறவென்ன- அது முதலாளித்துவ ஜனநாயகத்திற்காக நின்றால், நாட்டின் விடுதலையை சோசலிச சோவியத் என்பதாக மாற்றுவது எப்படி போன்ற பல கேள்விகள் - சரி என நினைத்த பதில்கள்- தவறாகிவிட்டதே- குறைகள் தெரிகிறதே என்கிற rectification என வரலாற்று கட்டங்கள் நகர்தல்.

1930 களின் இறுதி துவங்கி வெளித்தெரியும் வகையிலான legalised party - ஜோஷி தலைமையிலான செயல்பாடுகள், தடை - குவிட் இந்தியா காலம்- தடை நீங்கல்- நேரிட்ட தவறான அணுகுமுறைகள், விடுதலையா வெறும் அதிகார மாற்றமா என்கிற கேள்விகள், பாகிஸ்தான் முஸ்லிம் தனி தேசிய இனம் என்கிற அதிகாரி தீசிஸ், இல்லை தவறாக புரிந்து கொண்டோம் என்கிற மறுபார்வைகள் என இக்காலம் நகர்வதைக் காணலாம்.

ரணதிவே கால இடது அதி சூத்திர கல்கத்தா 1948 மாநாடு, சரி செய்து சீனப்பாதை என்கிற சிறு கால ராஜேஸ்வரராவ் சோதனை, பின்னர் அஜாய்கோஷ் வரவு- தொடர் செயல்பாட்டுக்காலம்- தேர்தல் பங்கேற்பு வெற்றி தோல்விகள், கேரளா இ எம் எஸ் ஆட்சி சோதனை- கலைப்பு, நேரு குறித்த விமர்சன மற்றும் நேரிய பார்வைகள், சீனா தொடுத்தப் போர், சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் விவாதம், உலக கம்யூனிஸ்ட் இயக்க மாறுபாடுகள் போன்ற சூழலில் கட்சிக்குள் பெரும் ஓயா விவாதங்கள்- சி பி எம் உருவாதல், அவரவர் தனித்துக்கூடி தங்களுக்கான திட்டங்களை வரைதல் என்பதுவரை இந்நூல் செல்வதை உணரமுடியும்.

இந்நூலை பெரும் கட்சி அறிஞர்களாக பார்க்கப்பட்ட தோழர்கள் அதிகாரி, மொகித்சென், பருக்கி, சின் மோகன், அவ்தார் சிங் போன்ற பலர் காலம் பிரித்துகொண்டு எழுதியுள்ளனர்.

மேலே சொன்னவை மிக மிக சிறிய அறிமுகமே. இந்நூலின் ஆசிரியர்களும் இந்த 50 ஆண்டு குறிப்புகள் முழு வரலாறல்ல என்றே தெரிவித்துள்ளனர்.

வால்யூம்களாக ‘டாக்குமெண்ட்ஸ்’ தொகுப்புகள் இக்காலத்திற்கு வந்துள்ளன. தோழர்கள் அதிகாரி , எம் பி ராவ் , மொகித் சென் போன்றோர் பெரும் உழைப்பில் அந்த தொகை நூல்கள் வந்தன. அவற்றை திருவிக கல்லூரி நூலகத்தில் பேரா ராமசாமி உதவியால் அப்போது வாங்கி வைக்க முடிந்தது.

Archives என்கிற இணைய தளத்தை ஏனோ மூடிவிட்டார்கள். அதில் சில வால்யூம்கள் கிடைத்தன. ஆய்வு மனமும் கூடுதல் வேட்கையும் கொண்டவர் அவ்வால்யூம்களை தேடி தெரிந்துகொள்ள முயற்சிக்கலாம்.

60 ஆண்டுகள் போது சில பிரசுரங்கள், கட்சியின் நிலைப்பாட்டை விளக்கும் வகையில் வந்தன. 80 ஆம் ஆண்டில் தமிழில் தோழர் பரதன் எழுதியதும், தேவ பேரின்பன் எழுதியதும் வந்தன.

சிபிஎம் தன் வால்யூம்களை 1964யைக் கடந்தும் கொணர்ந்தனர். சிபிஎம் எல், சோசலிஸ்ட்கள், அரசு உளவுத்துறையினர் என பலர் அவர்களுக்கு கிடைத்தவற்றை தொகுத்துள்ளனர். தனி நபர்களாக எம் என் ராய், எம் பி டி ஆச்சார்யா, சௌமேந்திர தாகூர் , முசாபர் அகமது, பிலிப்ஸ்பிராட் போன்றோர் எழுதியவையும் இருக்கின்றன. ஆங்கில புத்தகங்கள் சிலவும் வந்துள்ளன.

மேலே சொன்ன நூலை முதல் 50 ஆண்டுகள் என்கிற காலப்பகுதிக்கான நூலாக கொள்ளலாம். அதில் சில முக்கிய புள்ளிகளை உய்த்துணரலாம்.

-1920 அக்டோபரா அல்லது 1925 டிசம்பரா என்பதில் புரிதல்- ஏன் அப்படி என்கிற விளக்கம்

- கருத்துக்களை வழிகாட்டலை எங்கிருந்து வேண்டுமானாலும் (சோவியத், பிரிட்டன் கம்யூனிஸ்ட்களிடம்) பெறவேண்டிய சூழல் இருந்தாலும், இங்கு இந்தியாவில் இருந்துகொண்டு வெகுஜனங்களிடம் வேலை என்கிற எதார்த்தம் உணர்தல்

- ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப்போரில் - சோசலிச அரசு என்கிற ஒரே தாவலா அல்லது இரு கட்ட நகர்வா - விடுதலை அரசியல் ஜனநாயகம் , அடுத்த சோசலிச நகர்தல் குறித்த புரிதல்

- ஏகாதிபத்திய எதிர்ப்பில் சுயேட்சையான முன் முயற்சிகள் தேவை என்றாலும், பரந்த காங்கிரஸ், இன்னும் உதிரிகளுடன் சேர்ந்து செல்லவேண்டிய அவசியம் உணர்தல்

- காங்கிரசின் போதாமை குறித்த விமர்சனங்களுடன், தங்கள் போதாமைகளையும் அவ்வப்போது உணர்தல்

- 1947 ஆகஸ்ட் வெறும் அதிகார மாற்றம் என்பதிலிருந்து சுதந்திர இந்தியா - விடுதலை இந்தியா என்கிற புரிதல்

- தேர்தல் பூர்ஷ்வா முறை என்பதாக உணரப்பட்டாலும், தேர்தலில் நாடாளுமன்ற சட்டமன்றங்களில் பங்கேற்றல்

- பல கட்சி ஆட்சி முறை இந்திய சூழலை ஏற்றல், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்பதை விடுதல், அமைதி வழி வாய்ப்புகளை ஏற்றல்

- தேசிய சுயநிர்ணய உரிமை என்பதை 'கட்டாயமாக பிரிந்து செல்தல்' என புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை, மொழிவழி மாநிலங்கள் அதன் அதிகாரங்களை விரிவுபடுத்தல்

- காங்கிரசிற்கு மாற்று எனப்பேசும்போது , காங்கிரசை நம்பி செல்கின்ற ஜனநாயக சக்திகளிடமும் நம்பிக்கையை உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்தல்

- இந்திய நிலைமைகள் பற்றிய புரிதலை, பிற நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளைவிட , இந்திய கம்யூனிஸ்ட்கள் சரியாக சொல்ல முடியும்- அதற்கான சுயேட்சையான ஞானம் இருப்பதை அறிவித்தல்

போன்ற சில அம்சங்களை பட்டியலிட முடியும். இந்நூல் ஒவ்வொரு பகுப்பாய்வு காலத்திற்குமான சில முக்கிய கொள்கை அறிக்கை டாக்குமெண்ட்கள் குறித்தும், அவற்றில் இருந்த சில தவறான புரிதல்கள் பற்றியும் ஆங்காங்கே சொல்லிச் செல்லும்.

இதுவரை வாசிக்காதவர் வாசித்து பார்க்கலாம்.

21-10-2024

oct 22

மகாதேவ தேசாய்- காந்தியின் நிழல் நூலை அதன் ஆசிரியர், காந்தியர் குடும்பத்தைச் சார்ந்த திரு தி. விப்ரநாராயணன் அனுப்பியிருந்தார். நூல் எனக்கு அக்டோபர் 16, 2024 அன்று கிடைத்தது. மிக்க நன்றி.

காந்தியையும் காந்தியின் நிழலையும் ஊடும்பாவுமாக நெய்த அற்புத பிரதியை விப்ரநாராயணன் தமிழ் உலகத்திற்கு தனது அயரா உழைப்பால் தந்துள்ளார். காந்தியின் பெருந்தொண்டர் , பேரறிவாளர் மகாதேவ தேசாய் பற்றி தமிழில் நூல் ஏதுமில்லையே என்கிற பெருங்குறையை ஆசிரியர் நீக்கிவிட்டார். அவருக்கு என் வணக்கம். நூலிற்கு வாழ்த்துரையை தேசிய காந்தி அருங்காட்சியக இயக்குனர் திரு அண்ணாமலை அவர்கள் வழங்கியுள்ளார். அணிந்துரையை பேரா சுசிலா எழுதியுள்ளார்.

நூல் வந்தவுடனேயே ஹேமா படிக்க எடுத்துக்கொண்டு நெகிழ்ந்ததைப் பார்த்தேன். நேற்றும் இன்றுமாக சற்று நிதானகதியில் (அக் 21, 22) 200 பக்க மகாதேவ தேசாய் வாழ்க்கை வரலாற்று நூலை வாசித்தேன்.

நூலாசிரியர் 23 இயல்களில் மகாதேவ் அவர்களின் செயலாற்றல் திறனை - காந்தியுடனான பேரன்பை , பக்தியை, விவாதத்திறனை, சில நேரங்களில் சோக இழைகளை காட்டியிருப்பார். பன்முகமான போதும் தன் முகத்தை எங்கும் துருத்திக்காட்டாத மாபெரும் பண்பாளரின் வாழ்க்கையை படிப்போர் தரிசிக்கும் வண்ணம் திரு விப்ரநாராயணன் எழுதியிருக்கிறார்..

கணந்தோறும் பெருங்கடமை ஒன்றிற்காக 'தன்னை இழந்தவரின் வரலாறு 'என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் . மகாதேவ தேசாய் உலகிலிருந்து விடைபெறும் நொடிகள் இயல் 20ல் , வாசிக்கும் எவர் மனதையும் கனக்க வைக்கும்.

ஆகஸ்ட் 15 ல் ஆடிப்பாடுகிறோம். பொழுதெல்லாம் உழைத்த அம்மாமனிதன் எதையும் எதிர்பாராது நிரந்தர துயில் கொண்டதும் அந்நாளே. மகாதேவ தேசாய் திரு விப்ரநாரயணன் எழுத்தால் தமிழ் உலகறிய வந்திருக்கிறார். தமிழ் உலகு கொண்டாடும் என்றால் பெரு மகிழ்வே.

22-10-2024

oct 23

com SSG ex secy NFTE informed me the shocking news. I feel Very sad to hear the demise news of Com Seshadri, wonderful leader of NFTE BSNL and Telecom trade union movement. My heartfelt condolences.

He stood as a great soldier , emerged from Karnataka bangalore, a fine disciple of com O p Gupta. He carried forward the best democratic traditions of telecom TU movement where ever he made his presence.

A nice personality, polite man, a dignified comrade lived simple life, though from officer folk. He never aspired to show himself 'up above all', standing in low profile, always trying to accommodate comrades around him. He stood for the welfare of employees of telecom, shown solidarity with other PSU workers whenever warranted at bangalore.

He was a man in his strict sense of daily discipline, a man lived with mostly two square meals a day, had the habit of taking his travels in buses and trains. He never bothered about his bodily comforts.

I had many chances to have fair discussions on various telecom matters with him and I feel a loss of a fellow comrade

A lovable simple fine man with a larger heart is no more. a great loss to the Karnataka workers. My deep condolences.

oct 24

f we indulge in exaggeration, it will do no good. If we think we alone are right and suppress others in the belief that we are great and therefore no harm in coercing others, we shall fall, we shall be deceiving ourselves. If we are truthful, we shall show fearlessness and earnestness in our conduct. If we are in error we should duly admit it and we shall not fall thereby

- Gandhiji Dec 18th 1947

Gandhi's comfort zone expanded or shrank in exact proportion to the awakening or failing of those around him. Mira behen remarked 'We can kill Gandhi with our moral faults or serve him into a ripe old age by awakening to his word'.

- Mushirul Hasan In his Faith and Freedom

நாட்டின் வளர்ச்சி, கட்சி வளர்ச்சி, அமைப்பு வளர்ச்சி , தனி நபர் வளர்ச்சி போன்ற அம்சங்களை , பெறுகின்ற அதிகாரம், செல்வாக்கு, சொத்து, பணம் என்கிற அளவுகோலில் கதைக்கும்போது, நம் ஒவ்வொருவரின் 'அறியாமை வளர்ச்சியும் ' உள்ளீடாக ஒட்டிக்கொண்டு வருகிறது.

- தோழன் நமரி

oct 25

தமிழகத்தில் அரசியல் ஆர்வம் உள்ளவர், குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட்களின் கதையை அறிந்துகொள்ள விரும்புவோர் படிக்க வேண்டிய நூல்களில் ஒன்று

தோழர் ஹரிகிஷன்சிங் சுர்ஜித் எழுதிய ' இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பெருமை மிகு வரலாறு'.

தோழர் சுர்ஜித் சிபிஎம் கட்சியின் பொதுச்செயலராக எழுதிய நூல். 75 ஆண்டுகள் என்பதை மனதில் வைத்து ஆங்கிலத்தில் An Outline History of the Communist Movement in India என அவர் எழுதினார். தமிழில் மொழிபெயர்த்து 200 பக்க அளவில் 1994ல் கொணர்ந்தனர். நூலின் 30 ஆம் ஆண்டை நாம் கடந்து செல்கிறோம்.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் ' இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று குறிப்புகள்' என்ற நூல் பற்றி சிறிய அளவில் இடுகை செய்திருந்தேன். அது சிபிஅய் கட்சியின் 50 ஆண்டுகால வரலாற்றை மிகச் சுருக்கமாக பேசும் நூல். தோழர்கள் அதிகாரி, பருக்கி, மொகித்சென், அவதார் சிங் போன்றோரின் கூட்டு முயற்சி அது.

இந்த நூல் சுர்ஜித் அவர்களால் 1917 சோவியத் புரட்சியிலிருந்து, சோவியத் உடைவு- வீழ்ச்சி குறித்து இந்தியாவில் புரிந்துகொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் வரை ஏறத்தாழ 75 ஆண்டுகள் குறித்த கச்சிதமான பதிவாக பார்க்கலாம்.

சிபிஅய் தன் கட்சி வரலாறு என ஆவணங்களை வெளியிட்டு வருகிறது என்றால் , சிபிஎம் துவங்கிய பின்னர் ஆவண வெளியீடுகள் 'கட்சி வரலாறு' என்றில்லாமல், இந்திய கம்யூனிஸ்ட் 'இயக்க வரலாறு ' - history of communist 'movement' of India என ஆவண வெளியீடுகள் வருவதும் மிக முக்கியமாக பார்க்க வேண்டிய ஒன்றாகும். 'சிபிஎம் வரலாறு' என அவை வெளியிடப்படவில்லை. அதேநேரத்தில் 1964க்கு பின்னரான சிபிஎம் நிகழ்வுகளே இயக்க வரலாறு என சுருக்கப்படுதலும் இங்கு நடந்தேறிவிடுவதைக் காணமுடியும்.

1917 முதல் - விடுதலைக்கால 1947 வரை , ஒரே வகையிலான வரலாற்று புரிதலை, பொதுவாக இரு கட்சி ஆவணங்களும் தருவதைக் காணமுடியும்.

சிற்சில விடுபடல்கள் இருக்கும். 1964 ல் கட்சி உடைவு - தனியாக சிபிஎம் உருவாதலுக்கு பின்னர்தான் வரலாறு குறித்த ஆவணங்கள் நேர் செய்யப்படலாயின. அதற்கு தகுந்தாற் போல அணிகளுக்கு வரலாற்றை எடுத்துச் சொல்லும் பொறுப்பில் கட்சித்தலைவர்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இங்கு அமைப்பு தலைவர்களே வரலாற்றாசிரியர்களாகவும் இருந்ததால், ஆங்காங்கே அரசியல் தேவைக்கேற்ப சாய்வுகள் இருப்பதை கூர்ந்து படிப்பவர்களால் உணரமுடியும். சில highlights- சில dims இருப்பதைத்தான் இங்கு நான் குறிப்பிடுகிறேன். இதை சுர்ஜித் அவர்கள் எழுதிய நூலிலும் highlights- dims என்பதான bias யை நான் உணர்ந்தேன். இந்த நூலின் சிறப்பை நான் உணர்ந்த சிறிய அளவிலான bias (அல்லது எனக்கு கடந்த 40 ஆண்டுகளில் உருவான சிறிய அளவிலான bias) எந்த விதத்திலும் குறைத்துவிடாது.

தோழர் சுர்ஜித் சொல்வதை இங்கு தருகிறேன்

"..பல்வேறு கட்சித் தலைவர்கள் , கட்சி வரலாற்றின் சில அம்சங்களை விவரித்த போதிலும் கூட , இயக்கத்தின் சாதனைகளையும், தோல்விகளையும் விஞ்ஞானரீதியாக பகுப்பாய்வு செய்ய தீவிரமான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை ...கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வளர்ச்சி என்பது இந்தத் தலைவர்கள் சொந்த முறையில் அடைந்த அனுபவத்தின் ஒரு பகுதியாகும்...அனுபவம் ஒன்று திரட்டப்படவில்லை. ..ஒன்று திரட்டுவதற்கான பணியை கமிஷன் மேற்கொள்வது அவசியமாகும்".

அவர்கள் கமிஷன் மேற்கொண்டு பல வால்யூம்களை documents on movement எனக் கொணர்ந்தனர். அது குறித்தும் ஆங்கிலத்தில் விரிவாக சுர்ஜித் எழுதினார். தமிழில் வந்ததா என எனக்குத் தெரியவில்லை.

இந்தியாவின் பண்டைய வரலாறு என்பது கிடைத்த கல்வெட்டுகள், தொல்லியல் ஆதாரங்களை கொண்டு பின்னப்படும் ஊக எழுத்துக்களாகவே வரலாற்றாசிரியர்களால் தரப்பட்டுள்ளன. மத்தியகால இந்தியா குறித்தும் , பின்னர் வந்த நவீன இந்தியா குறித்தும் கூட சிற்சில வேறுபட்ட பார்வையுடன் தான் வரலாறுகள் எழுதப்படுபவர்களால் நமக்கு கைமாற்றித் தரப்படுகின்றன.

விஞ்ஞானபூர்வ ஆய்வு என்பதன் பொருளாக முடிந்தவரை உள்ளது உள்ளபடி எந்த ஒதுக்கலும் (இன்றுள்ள அரசியலுக்கு சௌகரியம் இல்லை என்பதால் விட்டுவிடாமல் கோர்ப்பது) இல்லாமல் ஆவணங்களை, பின்னர் அது குறித்து விமர்சன பகுப்பாய்வுடன் வந்த தொடர் ஆவணங்களை வைப்பது, கையில் இருக்கக்கூடிய எல்லா மாற்று சிந்தனைகளையும் அடுக்கி வரலாற்று பக்கங்களுக்குள் அனுமதிப்பது என்று எடுத்துக்கொள்ளலாம். நான் பார்த்த அளவில் விடுபடல்கள் இருக்கவே செய்கின்றன. Highlights - dims இருக்கவே செய்கின்றன. அதை நான் புரிந்து கொள்ள முயற்சிக்கிறேன்.

என் தலைமுறையினர் , கட்சி உடைந்து - அவரவர் சோதனை- பாலிமிக்ஸ்- இந்திரா எமர்ஜென்சி- ஜனதா சோதனை பின்னணி கால பதிந்தா- ஜலந்தர் கட்சி காங்கிரஸ் காலத்தில் கட்சி வாழ்க்கையில் (அளவில் மிகச் சிறிய) நுழைந்தவர்கள். எங்கள் முந்திய தலைமுறையினர் மத்தியில் இருந்த கடும் கோபம் மோதல் எமோஷன் என்பதில்லாமல்- இந்தியாவிற்கு 'இடதுசாரி ஜனநாயக மாற்று' என்கிற அரசியல் முழக்கப் பின்னணி தொடங்கிய 40 ஆண்டுகளுக்கு மேலான கால வெளிக்குரியவர்கள். இதன் பொருள் தொழிற்சங்க அரங்கில் இரு அணிகளாக நாங்கள் போட்டியிடாமல், சிறு சிறு மோதல்களை அனுபவிக்காமல் இக்காலத்தை கடந்தோம் என்பதில்லை. அவையிருந்தன. இருக்கவும் செய்கின்றன. எங்களுக்குள் குழு மோதல்களையும் செய்யாமல் இல்லை. தோழமை தொலையாமல் அவை இருக்கின்றன என்பது முக்கியமானது.

1977- 1978 முதலான இன்றுள்ள வரையிலான நீண்ட ஆண்டுகள் இடதுசாரிகள் பெரும்பாலும் (பெரும்பாலும்) ஒத்த நிலைப்பாடுகளையே எடுத்து வருகின்றனர். சிற்சில வேறுபாடுகள் இல்லை என்பதில்லை. திட்டம் , கட்சி காங்கிரஸ் ஆவணங்களில் சில வேறுபாடுகள் உள்ளன என்பதற்கான சாயல்கள் தெரியும். அன்றாட அரசியல் நிலைப்பாடுகளில் , சிறு சிறு சந்தேகங்கள்- பரஸ்பர குறைகள் என அணிகளிடம் சொல்லப்பட்டாலும், பொதுவான நிலைப்பாட்டை பார்க்க முடியும்.

ஆரம்பத்தில் ஒரே கட்சியாக இருந்து உட்கட்சி போராட்டங்கள் நடத்திய ஆண்டுகள், உடைவிற்கு உள்ளாகி பரஸ்பரம் போராடிய 14 ஆண்டுகள் என்கிற காலத்தை விட, தனித்தனி கட்சிகள் ஆகி ஒன்றாக அரசியல்

நிலைப்பாட்டில் பயணிக்கும் காலம் மிக நீளமானது என்கிற புரிதலும் அவசியமாக இருக்கிறது.

நவீன இந்திய வரலாறு - விடுதலை இயக்க வரலாறு குறித்தும், இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் குறித்தும் மேம்பட்ட புரிதல்களுக்கான ஆவணங்கள் குவிந்து கிடக்கின்றன. வரலாற்று தாகம் உள்ளவர்க்கு அவை தடாகமாக இருக்கலாம். அவற்றில் கொஞ்சம் பார்த்தால் கூட 'absolute ' என்கிற உரிமை பாராட்டல்கள் நம்மிடம் நீங்க வாய்ப்பு இருக்கும்.

மரியாதைக்குரிய தோழர் சுர்ஜித் அவர்களின் இச்சிறிய நூல் வாசிப்புக்குரிய முக்கிய நூலாக எனக்குப்படுகிறது

25-10-2024

oct 26

முஷிரில் ஹாசனின் Faith and Freedom எடுத்து திரும்ப வாசித்து வரும்போது, அதன் 10ஆம் இயல் 'மரபு மற்றும் நவீனத்துடன் ' என்பதில் , ஆசப் அலி அவர்களின் Memoirs லிருந்து முஷிரில் ஹாசன் இரு ஒப்பீட்டை தந்திருப்பார். அதை பரிமாறிக்கொள்ளத் தோன்றியது.

அருணா ஆசப் அலியை பழைய கம்யூனிஸ்ட்கள், சோசலிஸ்ட்கள் காங்கிரஸ்காரர்களுக்கு தெரிந்திருக்கும். இப்போதும் அருணாவின் 'குவிட் இந்தியா கால துணிச்சல்' பல மேடைகளில் பேசுபொருளாக இருப்பதைக் காணலாம். கப்பற்படை புரட்சியின் போதும் அருணா முன்னணி தவிப்பாளராக இருந்தார். அருணாவின் துணைவர்தான் ஆசப் அலி. நன்கு கற்றவர். பகத்சிங் தூக்கு தண்டனையை குறைக்க , அவர் பகத்சிங்கின் தந்தை - காந்தி- பிரிட்டிஷாரிடம் ஓடியவர். பகத்திற்கான அப்பீல் ஒன்றை தயாரித்தவர். அவர் 'நினைவுகள்' என்கிற நூல் ஒன்றையும் எழுதியவர். பொது புத்தியில் இல்லாமல் காணாமல் போனவரில் ஒருவர்.

சரி , ஹாசன் இந்த இயலில் ஆசாத் India wins freedom என்பதில் எழுதியது குறித்து, அல்லது நாட்டின் பிரிவினையை உறுதியாக எதிர்த்த ஒரே மனிதன் எனச் சொல்லிக்கொண்டபோது, கிருபளானி, லோகியா போன்றவர்களிடமிருந்து வந்த எதிர்வினையை பதிவு செய்திருப்பார். ஆசாத்- காந்தி உறவுகளையும் சொல்லியிருப்பார். அதெல்லாம் சரி, ஆசப் அலியை ஏன் இழுத்தார் , முஷிரில்.

முஷிரில் போன்றவர் நேருவை கொண்டாடியவர்கள். முன்னோடி இஸ்லாமியத் தலைவர்கள் பலரை - டாக்டர் அன்சாரி, ஆசாத் போன்றவர்களை, விடுதலைப் போரில் முன்னணியில் பணியாற்றியவர்களை குறிப்பிட்டு இந்நூலில்- காந்தி சம்பந்தப்படுத்தி முஷிரில் பேசியிருப்பார். அப்போது ஹாசன் ஆசப் அலியை கொணர்ந்திருப்பார். நச்சென ஆசப் அலி 'காந்தி நேரு ஆசாத் ' ஒப்பீட்டு ஒன்றை மூன்றே வரிகளில் தந்திருப்பார்.

ஒன் லைனர் என்கிற வகையில் சினிமாக்கள் 2 மணிநேரத்திற்கு மேல் காட்டப்படுவதைக் காண்கிறோம். இந்த மூன்று வரிகளின் ஈர்ப்பால் மூன்று பாராக்கள் எழுதினால் என்ன ?

சரி ஆசப் அலி வரிகள்

" ..with Gandhi pulling towards heaven and Jawaharlal trying to bring down from Heaven an ideal world , Maulana is unsure what to do with the reins of chariot. This is tragedy". என்னவொரு அருமையான புரிதல், இந்த ஆளுமைகள் குறித்து ஆசப் அலியிடம்.

வேறு ஒரு இடத்தில் ஆசப் அலி காந்தி நேரு குறித்து இப்படியொரு ஒப்பீட்டை தன் நினைவுகளில் சொன்னதையும் முஷிரில் குறிப்பிடுகிறார். ஆசப் அலியின் வரிகள்

..Gandhi is a great man but is too great for India and has brought India to grief. Jawaharlal Nehru has a large heart, I think , and big dreams, but he has come a cropper at this crisis because he has surrendered to mass hysteria .

The tragedy is that the world worships words instead of meanings

ஆமாம் பலநேரங்களில் வார்த்தையை பிடித்துக்கொண்டுதான் , இவ்வுலகை நகர்த்தி வருகிறோம். அதில் மன மகிழ்ச்சி, திருப்தி அடைகிறோம். காயப்படுகிறோம்.

எவ்வளவு உயர் சிந்தனை மனிதர்கள்

என்ன அழகான தெளிவான புரிதல்கள்

தேடிப்போனால் நம் மனதை சற்றாவது விசாலப்படுத்த மனிதர்கள் இருந்துள்ளார்கள் என உணரமுடியும். இருக்கிறார்கள் எனக்கூட தேடி கண்டடைய முடியும். நம் உள்ளே தேடினால் கூட நம் அழகையும் விகாரத்தையும் தனித்தனியாகவோ , ஒரு சேரவோ காண முடியலாம்

26-10-2024

oct 27

இன்றைய (அக் 27, 2024) தவெக மாநாடு 4 அம்சங்களில் பாராட்டைப்பெறலாம்.

இலட்சக்கணக்கான இளைஞர் ஒருசேர ஏற்ற உறுதிமொழி

கொள்கை அறிவிப்பு

செயல்திட்ட முன்மொழிவு

அக்கட்சியின் தலைவர் திரு விஜய் அவர்களின் உரை- உரையாடல்

திரு விஜய் மேடையை மிக இலாவகமாக கையாண்டதும் பாராட்டப்படவேண்டியது. Secular social justice ideology என்பதையும், ideological enemy மற்றும் political enemy என சுட்டிக்காட்டியுள்ளார். Decent politics என்கிறார். வெறுப்பு அரசியல் வேண்டாம் என்கிறார். விசில் குஞ்சுகளாக இருக்க வேண்டாம். போதையில்லா தமிழகம் என சொல்கிறார்.

மதுரையிலும் தலைமைச் செயலக செயல்பாடு என இன்னும் சற்று நெருக்கமாக நிர்வாகத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல விழைகிறார். ஊழலற்ற நிர்வாகம் குறித்து பேசுகிறார்.

உச்ச சம்பாதித்யம் என்கிற நிலையை கைவிட்டுவிட்டு வருவதை உணர்த்தியிருக்கிறார். ஆனால் வந்த தொண்டர்கள் மிகச் சாதாரண ஏழ்மை நிலை பின்புலத்தைச் சார்ந்த புதியவர்களாக இருப்பதை பார்க்க முடிகிறது. அவர்கள் விஜய் நிலையில் இருப்பவர்கள் அல்லர். ஆங்காங்கே தங்களுக்கான வட்டார செல்வாக்கை அதிகாரத்தை அதன் பலன்களை பெற விழையலாம். அவர்களின் aspirationக்கு விஜய் த வெ க வடிகாலாக, வாகனமாக நாளை மாறவேண்டியிருக்கும். இந்த முரணை அக்கட்சி சந்திக்க நேரலாம்.

இன்று பார்த்தால் அக் 27 விஜய் அவர்களின் அரசியல் நாள். நாளை மக்களின் மனதைப் பொறுத்தே அவரது எதிர்காலம் அமையலாம். விஜய்க்கு மக்களுடன் உரையாட தெரிந்திருக்கிறது என்பதை உணர்த்தியுள்ளார். அவரால் political message ஒன்றை - coalition politics என்பதற்கான சாளரத்தை திறந்து வைத்துள்ளார்.

வாழ்த்துகள் தவெக தொண்டர்களுக்கும் அதன் தலைவர் விஜய்க்கும்..

27-10-2024

oct 28

Thus Spoke Dr Ambedkar

Theoretically, political parties are agencies for the expression and execution of public opinion but in practice parties create, direct, influence and often control public opinion. Indeed this is the chief function of a party.

A democratic government can remain democratic only if it is worked by two parties- a party in power and a party in opposition.

As Jennings puts it

If there is no opposition there is no democracy. His Majesty's opposition is no idle phrase. His Majesty needs an opposition as well as a government.

Jan 18th 1943

oct 29

டாங்கே 125

தோழர் டாங்கே அவர்களின் பிறந்த 125 ஆம் ஆண்டை இந்த அக்டோபர் 2024ல் நாம் கடந்துகொண்டிருக்கிறோம்.

அவரது பிறந்த நூற்றாண்டு நேரத்தில் பல பெருந்தலைவர்கள் அவர் குறித்து பல்வேறு காலங்களில் எழுதிய கட்டுரைகளை தொகுத்து Dange A Fruitful Life என்கிற நூலை கொணர்ந்தார்கள் . ஆங்கிலத்தில் 160 பக்க அளவில் வந்த நூல். தோழர் டாங்கே குறித்து வந்த நூல்கள் மிகக்குறைவுதான்.

இந்த நூலில் முன்னாள் குடியரசுத்தலைவர் ஆர் வெங்கட் ராமன், தோழர்கள் ரணதிவே, ராஜேஸ்வர ராவ், மொகித்சென், கே எல் மகேந்திரா, ரனேன் சென், கோபால் பானர்ஜி, சுரேன் பட்டா, கங்குலி, கௌதம் சட்டோ, பேனு தாகுர்தா, தாருண் சன்யால், ஜகதீஷ், அஜாய் தாஸ் குப்தா, திலிப் சக்கரவர்த்தி, சுப்ரதா பானர்ஜி, மிருண்மாய், பஞ்சனன், ரும்கி பாசு போன்ற பலர் டாங்கே குறித்து அவர்களின் மதிப்பீடுகளை தந்துள்ளனர்.

1964 கட்சி உடைவிற்குப் பின்னர், தோழர் ரணதிவே மிகக் கடுமையான டாங்கே, சிபிஅய் விமர்சகர்களில் ஒருவராக இருந்தார். ஆனால் 1959ல் டாங்கேயின் 60 ஆம் பிறந்த நாளையொட்டி அவர் நியுஏஜ் பத்திரிகையில் (அக் 1959ல்) தோழர் 'எஸ் ஏ டாங்கே ' என நீண்ட கட்டுரை ஒன்றை எழுதினார். அக்கட்டுரை இந்நூலில் இடம் பெற்றுள்ளது. டாங்கேவின் செயலாற்றலை, புலமையை, அமைப்பு தேர்ச்சியை, தொழிற்சங்க-கட்சிக்கான வழிகாட்டல்களை, பேச்சாற்றலால் கட்டிபோடும் திறனை தோழர் ரணதிவே மிகச் சிறப்பாக பாராட்டி பேசியிருப்பார். இப்படியெல்லாம் அன்பாக இருந்தவர்கள்தான் அரசியல் பார்வை வேறுபாட்டால், அமைப்பு பிரச்சனைகளை தீவிரமாக்கிக்கொண்டு தோழமைகளை தொலைத்தனர்.

1959 ல் கட்டுரையில் இளம் தோழர்களுக்கு டாங்கேவின் தியாகங்களை, தலைமைப்பண்பை அவர் அழகாக எடுத்துச் சொல்லியிருப்பார்.

டாங்கே 12 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்

1921லேயே இளம் 22 வயதில் தான் அறிந்த தெளிவில் காந்தி- லெனின் புத்தகம் எழுதியவர். 1922ல் சோசலிஸ்ட் இதழைக் கொணர்ந்தவர்.

கான்பூர், மீரத் என சதி வழக்குகளில் தண்டனை பெற்றாலும் ஆமாம் நாங்கள் முதலாளித்துவத்தை தூக்கி எறிந்து சோசலிச முறைக்காக நிற்கிறோம் என அஞ்சாமல் சொன்னவர். பின்னர் அவரது வாதம் நூலானது.

சிறை வாழ்க்கையின் ஊடாகவே இந்திய வரலாற்றை தான் அறிந்த அளவில் வரலாற்று பொருள்முதல் வாத பார்வையில் எழுதி 1950 ல் பண்டைய இந்தியா கொணர்ந்தவர் (கோபால் பானர்ஜி India From Primitive Communism to Slavery யை 1942-43 சிறைவாசத்திலேயே எழுதிவிட்டார். பின்னர் வெளியானது என்கிற தகவலை தந்திருக்கிறார். கோசாம்பி போன்றவர் இதை விமர்சித்தாலும், முக்கிய வரலாற்று நூலாக இந்நூல் இன்றும் பார்க்கப்படுகிறது)

இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் , போர் வேண்டாம் எனக்கோரி , உலகிலேயே போருக்கு எதிரான தொழிலாளர்களின் முதல் வேலை நிறுத்தத்தை பம்பாயில் தலைமையேற்று நடத்தியவர்- அக் 2, 1939ல்- டாங்கே என தோழர் பி டி ஆர் இதில் பெருமை பொங்க எழுதியிருப்பார்.

இந்தியாவில் கான்பூரில் 1925ல் first communist conference நடந்தேற, சிறையிலிருந்தே செய்ய முடிந்தவைகளை டாங்கே செய்தார் (என்ன என்ன எனச் சொல்லவில்லை) என்கிற செய்தியையும் தோழர் ரணதிவே எழுதியுள்ளார்.

1943-1959 இந்த 16 ஆண்டுகளில் AITUC யை அவர் தலைவராகவோ, பொதுச்செயலராகவோ இருந்து தொழிலாளர் மத்தியில் வீச்சாக கொண்டு சென்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1938 பம்பாய் தொழிற்தகராறு மசோதா எதிர்த்து 90 ஆயிரம் தொழிலாளரின் போராட்டத்தை அவர் நடத்தினார்.

பிரிட்டிஷ் அவரை மார்ச் 1940ல் இந்திய பாதுகாப்பு விதிகள் சட்டத்தில் உள்ளே தள்ளியது. டியோலி கேம்ப்பில் அடைக்கப்பட்டார்.

1925ல் அமைப்பு மாநாட்டை தொடங்கிய கட்சியால் 1943ல்தான் அதன் முதல் கட்சிக் காங்கிரசை நடத்தும் சூழல் பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்தது. அந்த காங்கிரஸ் தலைமைக் குழுவில் டாங்கே இருந்தார்.

1945 உலகத்தொழிற்சங்க சம்மேளன துவக்க நிகழ்வில் டாங்கே பங்கேற்று அதன் துணைத்தலைவரானார்.

டாங்கே மிகச் சிறந்த நாடாளுமன்ற அனுபவத்தை பெற்றவராக பின் நாட்களில் மிளிர்ந்தார். ஆனால் அரசியல் அமைப்பு சட்ட உருவாக்க

அசெம்பிளிக்கு போகமுடியாமல் பிரிட்டிஷ் ஆட்சி செய்த தகவலை இந்நூல் தருகிறது. அதற்கு செல்ல முடிந்த ஒரே கட்சி பிரதிநிதி சோம்நாத் லாகிரிதான். அவராலும் நீடிக்க வாய்ப்பில்லாமல் போனது வேறு கதை.

1957 கேரளா அனுபவம் சொல்லிவிட்டு, 1959ல் பார்த்த கணக்கின்படி 41 தொழிற்சங்க AITUC தலைவர்கள் சட்டமன்ற- நாடாளுமன்றத்திலோ செல்ல டாங்கேவின் பெரும் பங்கு இந்நூலில் பேசப்பட்டுள்ளது.

கோபால் பானர்ஜி 'டாங்கே அற்புத வாழ்வு' என விரிவான பதிவொன்றை செய்துள்ளார். நாடாளுமன்ற பங்களிப்பு, தொழிற்சங்க பங்களிப்பு, வரலாறு- மராத்தி இலக்கியம், கட்சி கொள்கை நிலைப்பாடுகள் என அவரின் பெரும் பாத்திரத்தை பேசியிருப்பார்.

கட்சியில் வேறுபாடுகள் உச்சம் சென்றபோது , உடைவை தடுக்க அஜாய் மறைவிற்கு பின்னர் டாங்கே சேர்மன், இ எம் எஸ் பொதுச் செயலர் என்கிற சமரசம் எட்டப்பட்டது. டாங்கேவிற்காக சேர்மன் போஸ்ட்டா என்கிற விமர்சனமும் வந்தது. டாங்கே வின் சில punch களை வெம்மை பதங்களை எதிர்நிலை எடுக்கும் தோழர்கள் தாங்க முடியா நிலை என்பதும் பேசப்பட்டது. கட்சி உடைவை தடுக்க முடியாமல் போனது. டாங்கேவை ஆக உயர் தலைவர் எனப் பார்த்தவர்களே அவரை கடுமையாக விமர்சிக்கலாயினர்.

வலதுசாரிகளின் கை ஓங்கவிடாமல் காங்கிரசுடன் unity and struggle என்பதை அவர் ஜனசங்கம் உள்ளிட்ட ஜேபி போராட்டக் காலத்தில் எடுத்துரைத்தார். இந்திரா அவர்களின் எமர்ஜென்சி ஆதரவு, ஜனதா வெற்றி, பதிந்தா மாநாடு நிகழ்வுகளுக்கு பின்னர் , டாங்கேவின் செயல்பாட்டை highly individualistic என கட்சி பார்த்ததால் அவர் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

கட்சியை அமைத்து , போராடி சிறையில் வாடி , மக்களிடம் செல்வாக்கு பெற்று, உலக கம்யூனிஸ்ட் இயக்க தத்துவார்த்த போராட்டத்தில் முன் நின்றவரானாலும், அரசியல்வேறுபாடு என வரும்போது அவர் நீக்கப்படும் நிலை உருவானது. 60 ஆண்டுகள் தான் கட்டிய கட்சியிலிருந்து அவர் வாழ்க்கை துண்டிக்கப்பட வேண்டிய நிலை உருவானது. பின்னர் AICP- UCPI

என அவர் பயணப்பட்டார். UCPI இதழாக வந்து கொண்டிருந்த New Thinking Communist ல் மொகித், ஆர் வி எழுதிய டாங்கே குறித்த கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

அரசாங்கம் அரசியல் மாற்றுக் கருத்து கொண்டவர்களை தண்டிக்கும்போது , நம்மால் 'அரசியல் பழிவாங்கல்' என உரக்க சொல்லிவிட முடிகிறது. ஆனால் கட்சி அமைப்புகளில் மாற்று அரசியல் சிந்தனைகளுடன் ஒருவர் நீண்ட பயணம் செய்ய முடிவதில்லை. அங்கு அரசியல் மாற்று எனில் ஒன்று உடைவு அல்லது கட்சி விட்டு வெளியேற்றப்படுதல் என்கிற ஸ்தாபன வடிவ நடவடிக்கைகளே பதிலாக கிடைக்கும். அரசியல் பிரச்சனைகளுக்கு ஸ்தாபன வழி தீர்வு என்பது 'அரசியல் பழிவாங்கலாக' அங்கு பார்க்கப்படுவதில்லை. ஒழுங்கு பிரச்சனை- நடவடிக்கை என பார்க்கப்படுகிறது.

டாங்கேவின் சிந்தனைகளை ஒருவர் ஏற்கலாம்- நிராகரிக்கலாம். இந்திய கம்யூனிச இயக்கத்தின் உயர் தலைவர்களுள் ஒருவராக, விடுதலை இந்தியா வளர்ச்சி குறித்த மிக நிதான பார்வை கொண்டவராக, சாதி மத மொழி பிரச்சனை உள்ள நாடு ஒன்றில் சமூகத்தில் அவை விடுதலைக்குப்பின்னர் 'பெறப்பட்ட நாட்டின் ஒற்றுமைக்கு' ஊறு விளைவிக்கா அரசியல் திசை குறித்து அவர் பேசி வந்தார். வலது சாரி அபாயத்திற்கு நாடு எப்பொழுது வேண்டுமானாலும் பீடிக்கப்படலாம் என்பதை அவர் வாழ்ந்த 1991 வரை நினைவூட்டிக்கொண்டே இருந்தவர் தோழர் டாங்கே. என்னை 'ஏழை' என சொல்லாதே 'உழைப்பவன்' என என் வர்க்கப் பெயரைச் சொல்லி அழை என கம்பீரமாக பேசியவர் தோழர் டாங்கே.

டாங்கே 20க்கும் மேற்பட்ட நூல்களை, ஏராள கட்டுரைகளை, சொற்பொழிவுகளை செய்தவர். ஓரளவிற்கு அவர் பெண் ரோசா தேஷ்பாண்டே தொகுத்தார். அவர் இன்னும் வரலாற்றாய்வாளர் பார்வைக்கு செல்லாமல் இருப்பது, கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு கூட நட்டம்தான்.

வாய்ப்பு இருந்தால் வேறு கட்டுரையாளர்கள் டாங்கே குறித்து பேசியிருப்பதை பார்க்கலாம்

29-10-2024

oct 30

டாங்கே 125 - இடுகை 2

டாங்கே நூற்றாண்டின்போது வந்த 'டாங்கே பயன்நிறை வாழ்வு' Dange A Fruitful Life நூலை அறிமுகப்படுத்தி இடுகை செய்திருந்தேன். அந்நூலில் சாராம்சமாக உள்ள வேறு அம்சங்களை சுருக்கமாக இங்கே தர முயல்கிறேன்.

தோழர் ராஜேஸ்வர ராவ், டாங்கேவின் 75 ஆம் ஆண்டில் பார்ட்டி லைப் இதழில் (7-10- 1974) Great Qualities of Com S A Dange என்கிற சிறு கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அதன் சாராம்சம்

கட்சியை தாண்டி இந்தியாவிலும், உலகின் பகுதிகளிலும் பெரும் அறிவுஜீவியாக டாங்கே பார்க்கப்படுவது பெருமிதமான ஒன்று

1930களில் நான் நுழையும்போதே பெரும் ஈர்ப்பாளராக அவர் இருந்தார்.

டாங்கே தான் கூறப்போகும் கருத்துக்கள் தன்னை அமைப்பிற்குள் மைனாரிட்டி ஆக்கிவிடும் என ஒரு போதும் கவலைப்பட்டதில்லை. சரி என உணர்ந்த ஒன்றிற்காக விடாமல் போராடுவார்.

1962 சீன ஆக்ரமிப்பின் போது , கட்சிக்கு நெருக்கடி உருவானது. கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்கள் வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி பலவீனப்படுத்த நினைத்தார்கள். டாங்கேவின் வழிகாட்டல், செயல் திட்டங்களால் கட்சி பல அவதூறுகளிலிருந்து காப்பாற்றப்பட்டது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தாக்குதலிலிருந்து தற்காக்கும் போரை அவர் செய்தார். பூர்ஷ்வா அரசா - சோசலிச அரசா எதன் பக்கம் என்ற கேள்வியை இலாவகமாக அவர் கையாண்டு சோசலிச அரசே ஆனாலும் ஆக்ரமிப்பை ஏற்க முடியாதென்ற பாதையைக்காட்டி , இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தையே மீட்டார். சோவியத் கட்சி இந்தியா எனும் நண்பனா- சீனா எனும் சகோதரனா என தடுமாறியபோது, டாங்கேவின் விவாதத்திறனால் , சீனா ஆக்ரமிப்பு சரியல்ல என சோவியத் ஏற்று இந்தியா பக்கம் நிற்கலானது குறித்து , தோழர் சி ஆர் மட்டுமல்ல , நூலில் மொகித் உள்ளிட்ட மற்றவரும் விளக்கியுள்ளனர்.

இங்கு தோழர் சி ஆர் டாங்கே எழுதிய Neither Revisionism Nor Dogmatism Our Guide என்கிற விவாதத்தை குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

கம்யூனிஸ்ட் இயக்கம் குறித்து அறிந்தவர்க்கு தெரியும்- டாங்கே போல 'ரிவிசனிஸ்ட் ' என்கிற அவ முத்திரையை தாங்கியவர் வேறு எவருமல்லர் என்று.

கல்கத்தா சார்ந்த ரனேன் சென் இயக்கத்தின் மூத்தவரில் ஒருவர். டாங்கேவிடம் கொள்ளத்தகுந்த தள்ளத்தகுந்த அம்சங்கள் குறித்து அசை போட்டுள்ளார்.

1924 கான்பூர் சதி வழக்கில் பிரதான குற்றவாளியாக பிறருடன் டாங்கே முதலாக வைக்கப்பட்டிருந்தார். 1928 மீரத் சதியில் முசாபர் அகமது தலையாய குற்றவாளி யாகவும் மற்றும் டாங்கே உள்ளிட்ட 30 பேர்கள் மீது வழக்கு.

ரனேன் கருத்துப்படி (சோவியத் குட்ஸ்போன் கருத்தில்) அஜாய் சாகாமல் இருந்திருந்தால், உடைவு தடுக்கப்பட்டிருக்கலாம் என்கிற ஊகம் நூலில் சொல்லப்பட்டுள்ளது. ஏனெனில் தோழர்கள் நம்பூதிரி, பாசு, ராமமூர்த்தி மூவரும் அஜாயுடன் மிகத்தோழமையாக இருந்தவர்கள்.

1964ல் பெரும் உடைவு என்றால் , பதிந்தாவிற்கு பின்னர் சிறு உடைவு ஏற்பட்டது. புதிய கட்சியிலும் மொகித் உடன் டாங்கே புதல்வி வேறுபட்டுப்போனதும் நடந்தது என்கிறார் சென்

தோழர் மொகித்சென் டாங்கே நூற்றாண்டு என்கிற சிறு கட்டுரையை அக் 15 1998 நியு திங்கிங் கம்யூனிஸ்ட் இதழில் எழுதியிருந்தார். மொகித் தரும் முக்கிய செய்தி, 1942 குவிட் இந்தியா போராட்டம் வரவேண்டாம், வந்துவிட்டால் கட்சி கலந்துகொள்வது நல்லது என்கிற கருத்தை டாங்கே தெரிவித்தார். இங்கு மொகித் எழுதியிருப்பது- "ஒருவேளை அன்று டாங்கே கருத்து ஏற்கப்பட்டு குவிட் இந்தியாவிற்கு எதிராக நிற்காமல் போயிருந்தால், கட்சி 'இமேஜ் ' கூடியிருக்கலாம். துரோகப்பட்டம் ஒட்டப்பட்டிருக்க முடியாது."

சோசலிஸ்ட்கள் அன்று பெரும் வீரர்களாக அந்த இடத்தை எடுத்துக்கொண்டதை வரலாறு குறித்துக்கொண்டது.

மொகித் எழுதுகிறார்- டாங்கே எப்போதும் சர்வதேசியம் என்பதற்காக இந்திய தனித்த தேசக்கட்சித்தன்மை என்பதை விட்டுவிடக்கூடாது என சொல்லி வந்தார். ஆனால் அவரது நிலைப்பாடு பல நேரங்களில் ஏற்கப்படாமல் போனது. மொகித் டாங்கேவின் பன்மொழி அறிவு குறித்தும் எழுதியுள்ளார். தாய்மொழி மராத்தி தவிர ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், உருது, பெங்காலி போன்றவற்றை அவர் அறிந்திருந்தார்.

டாங்கே சிறை வாழ்க்கை 12 ஆண்டுகள், 16 ஆண்டுகள், 18 ஆண்டுகள் என பலவாறு இந்நூலில் அவரவர் தெரிந்துகொண்டபடி சொல்லப்பட்டுள்ளது. எத்தனை ஆண்டுகள் என சமீபத்தில் வாழ்ந்தவர் வரலாற்றைக் கூட சரியாக சொல்ல முடியாத குறையை இந்நூல் காட்டுகிறது. 18 ஆண்டுகள் என்றால் - எக்காலம் எவ்வளவு ஆண்டுகள் என்கிற விவரத்தை வழங்க வேண்டிய பொறுப்பை கட்டுரையாளர்கள் எடுத்துக்கொள்ளாமல் போனது ஏனோ?

குடியரசுத் தலைவராக இருந்த ஆர் வெங்கட் ராமன், மராட்டிய அரசாங்கம் ஏற்பாடு செய்த வாழ்வில் பங்கேற்று தொழிலாளர் இயக்க பீஷ்ம பிதாமகன் பட்டத்தை அவருக்கு வழங்கினார். டாங்கேவின் பெருந்தொண்டை அவர் புகழ்ந்து பேசினார். 1946ல் பம்பாய் எம் எல் ஏ வாக இருந்து , 1957 நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளை குறிப்பிட்டார். நேருவிடம் டாங்கேவிற்கு இருந்த நல்லுறவை, தோழமையை ஆர் வி சுட்டிக்காட்டினார்.

நிலப்பிரபுத்துவம் என்பதை சட்ட வழியில் ஒழிக்க நேருவின் முயற்சியை பாராட்டுகிறேன். அதே போல் முதலாளித்துவ ஒழிப்பிற்கும் அவர் முயற்சி எடுக்கவேண்டும் என நேருவிடம் நேருக்கு நேர் டாங்கே சொன்னதை ஆர் வி நினைவு கூர்ந்தார்.

தோழர் கே எல் மகேந்திரா சில முக்கிய செய்திகளை சொல்கிறார். மகேந்திரா மட்டுமல்ல வேறு சிலரும் டாங்கேவின் ஆரம்ப திலகர் தொடர்பை சொல்கின்றனர். தனது சக தோழர்களிடம் “அந்த திலகரால் கெட்டுப்போனவன்ப்பா நான் “ என டாங்கே சொல்வாராம். திலகர் தான் கல்லூரி மாணவரான டாங்கேவை பம்பாய் பஞ்சாலை உள்ளிட்ட தொழிலாளர்களிடம் வேலை செய் என்றவர். அதை வாக்காக எடுத்துக்கொண்டு திலகரின் சீடராக தொடங்கியவர் மார்கஸ் லெனின் சீடராக அவர் மாறிப்போனதை நூலில் பலர் குறிப்பிடுகின்றனர்.

மகேந்திரா எழுதுகிறார்- சைமன் கமிஷனுக்கு எதிரான போராட்டத்தில் அவரால் தொழிலாளரை கொணர முடிந்தது. ரெட் யூனியன் அனுபவம் - மீண்டும் ஏ அய் டி யூ சி யில் சேர்ந்து பணியாற்றுவது என வந்தபோது, கம்யூனிஸ்ட் அல்லாத என் எம் ஜோஷி உள்ளிட்ட தலைவர்களுக்கும் நம்பிக்கை ஒன்றை டாங்கே ஏற்படுத்த நினைத்தார். ஒற்றுமைக்கான மருந்தாக அது அமைந்தது. அரசியல் தீர்மானங்களை 75 சத ஒப்புதல் இல்லாமல் நிறைவேற்ற முடியாது என்கிற நிலைப்பாடுதான் அது.

மகேந்திரா டாங்கேவிற்கு 18 ஆண்டுகள் சிறை வாழ்க்கை என எழுதியுள்ளார். டாங்கே கட்சிக்கு ஒவ்வாத, மார்க்சியப்படி சரிதானா என கேள்விக்கு உள்ளாகக்கூடியவற்றையும் பேசியுள்ளார் என மகேந்திரா பதிவு செய்கிறார்.

ரின் கப்பற்படை புரட்சி ஆதரவு அப்பீல் நகலை எழுதியது டாங்கே தான் என இந்நூல் தெரிவிக்கிறது.

மகேந்திரா அடுத்து தெரிவிப்பது டாங்கேவின் புகழ் வாய்ந்த two pillar policy- save the industry save the workers. இது குறித்தும் கம்யூனிஸ்ட்கள் மத்தியில் விவாதம் நடந்துள்ளது. எதற்கு பூர்ஷ்வாக்களின் (பொதுத்துறை குறித்து தான் டாங்கே இம்முழக்கம் தந்தார்) லாப வேட்டைக்கு நம் காப்பு என்று கூட விவாதம் போனது. ஆனால் டாங்கேவின் முழக்கம் அனைவராலும் பின்னர் ஏற்கப்பட்டது. இந்திராவை அவர் புரட்சிகர ஜனநாயகவாதி என சொல்லியிருந்தார்.

முத்தரப்பு மாநாடுகளில் எல்லா தரப்பும் டாங்கே பேசுவதை கூர்மையாக கவனிக்கும் பழக்கம் இருந்ததை இந்நூல் பேசுகிறது.

பாசுதேவ் கங்குலி 1981ல் நிரந்தரமாக டாங்கே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதை சொல்லிவிட்டு, 1930ல் கூட அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட செய்தியை தருகிறார்.

1930ல் மீரத் வழக்கில் உள்ளே இருந்த கட்சித் தோழர்கள் , காந்தியின் உப்பு சத்தியாகிரகத்தை விமர்சித்தனர். டாங்கே நேர்மறையாக அதை பார்க்க வேண்டும், பங்கேற்க வேண்டும் என்றாராம். வேறுபாடு ஏற்பட்டு அவர் தனியாகவும் , மற்றவர் இணைந்து கூட்டாகவும் தங்கள் defence யை செய்து கொண்டனர். இத்தருணத்தில் அவர் கட்சியைவிட்டு நீக்கப்பட்டார். 1935ல்

அவர் மிகுந்த மரியாதையுடன் கட்சியில் வரவேற்கப்பட்டார் என்ற செய்தியை இந்நூல் தருகிறது. கங்குலி எழுதுகிறார்

The CPI leadership gave him punishment several times thro open scolding. During his various parts of his life he had to hear abuse like revisionists.

கங்குலி டாங்கே 16 ஆண்டுகள் சிறை வாழ்க்கை எனச் சொல்லி, இவரும் breakup கொடுக்காமல் செல்கிறார். பல்கேரிய சோசலிஸ்ட் அரசாங்கம் உயரிய டிமிட் ராவ் விருதையும், சோவியத் உயரிய லெனின் விருதையும் டாங்கேவிற்கு தந்தன.

பின் நாட்களில் சிபிஎம் பெரும் முன்னோடியான முசாபர் , டாங்கேவுடன் தோழமையாக இருந்த காலத்தில் 1921ல் காந்தி லெனின் எழுத 22 வயது இளைஞனுக்கு guts வேண்டும் என பாராட்டி சொன்னதை கங்குலி சொல்கிறார்.

1951 மாஸ்கோ ஸ்டாலின் சந்திப்பை அவசியமாக்கிய ஆவணமாக 3P இருந்தது என்கிறார் கங்குலி. இதை விரிவாக ஜகதீஷ் குப்தாவும் எழுதியுள்ளார். மூன்று பி என்பது அஜாய்கோஷ்- புருசோத்தம், டாங்கே- பிராபாகர், காட்டே- பிரகாஷ் . புருசோத்தம் பிராபகர் பிரகாஷ் என்கிற பி எழுத்து புனை பெயரில் Note on the Present Situation in Our Party என்று செப்டம்பர் 30 1950ல் எழுதப்பட்டதுதான் 3பி ஆவணம். 1948 ரணதிவே அதிதீவிரம், ராஜேஸ்வரராவ் சீனப்பாதை சூழலில் மாற்றாக வந்த ஆவணம். 1951 ஸ்டாலின் சந்திப்பிற்கு இரு பக்கத்திலும் இருந்து 4 தோழர்கள் அஜாய் , டாங்கே , சி ஆர் , பசவபுன்னையா சென்று உரையாடி விளக்கம் பெற்று வந்தனர். ஸ்டாலின் சுஸ்லோவ் வழிகாட்டலையும் கணக்கில் கொண்டு வந்ததுதான் பின்னரான 1951 திட்டம்.

கங்குலி சொல்வது the three Ps document created the foundation of the new programmes. Dange evolved line of unity and struggle.

பஞ்சனன் சட்டோ நினைவு கூர்கிறார். எனக்கு முன்னர் காங்கிரஸ்- ஜனசங்கம் என்கிற தேர்வு மட்டுமே இருந்தால் நான் காங்கிரசை தேர்ந்தெடுக்கவே சொல்வேன் என 1971ல் டாங்கே பேசினார். இதே கேள்வியை எங்களிடம் தோழர் ஓ பி குப்தா அரசியல் உரையாடல் போது வைத்தார். என் தொகுதியில் காங்கிரசும் ஜனசங்கமும் போட்டியிடுகிறது.

நான் காங்கிரசிற்கே வாக்களிக்க வேண்டும். No Congress என்பதை எப்படி அங்கு அமுல்படுத்த முடியும் என குப்தா கேட்டார்.

தாருண் சன்யாலும் , கௌதம் சட்டோவும் டாங்கேவின் இலக்கிய அறிவை, கலை உணர்வை பேசுகின்றனர். தாகூர் சரத் சந்திரர் படிக்க அவர் பெங்காலி கற்றுக்கொண்டாராம்.

கௌதம் தரக்கூடிய வேறு செய்தி- எம் என் ராய் லெனினை கலந்து பேசி மூன்றாம் அகில 4 வது மாநாட்டிற்கு சுபாஷ், டாங்கே, சிரஞ்சன் (சி ஆர் தாஸ் மகன்) , சசீந்திர நாத் சன்யால் (இவரது பேரன் சன்யால் மிக முக்கிய வலது சாரி அறிஞர் இப்போது) , உபேந்திர பானர்ஜி அழைத்திருந்தார். எவரும் போக முடியவில்லை. லெனின் டாங்கேவின் காந்தி லெனின் , சோசலிஸ்ட் பத்திரிகைகளை அறிந்திருந்தார் என்கிற செய்தியையும் இந்நூல் தருகிறது. சுபாஷ் தனது indian struggle நூலில் டாங்கே குறித்து எழுதியுள்ள செய்தியை கௌதம் தருகிறார்.

AIBEA பிரபாத்கர் பர்வானா, NFPTE குப்தா ஞானையா , எல் ஐ சி நாச்னே போன்றவர்களுக்கு அவ்வப்போது ஆலோசனை சொல்லி உற்சாகப்படுத்தியவராக டாங்கே இருந்துள்ளார். வங்கி இயக்க தோழர்களுக்கு துணையாக டாங்கே இருந்தது பற்றி ஜகதீஷ் சொல்கிறார். டாங்கேவின் கட்டுரையான computer or man eater எல் அய் சியில் போராட்டம் தீவிரமாக உதவியது. இன்று அவர் இருந்தால் இதை எப்படி மீளாய்வு செய்திருப்பாரோ?

1962ல் அஜாய் மறைந்தவுடன் அடுத்த பொதுச் செயலர் டாங்கே என்ற கருத்து பலமாக வந்தது. பின்னால் சிபிஎம் தொடங்கிய தோழர்கள் எதிர்ப்பை கணக்கில் கொண்டு இ எம் எஸ் பொதுச் செயலர், டாங்கே சேர்மன் (புதிய பதவி) என்கிற சமரசம் கட்சி உடைவை அப்போது தற்காலிகமாக தடுத்தது. பொறுப்பேற்ற இருவரும் கல்கத்தா தோழர்களை சந்திக்க வந்தனர். டாங்கே கௌரவக்குறைவாக கல்கத்தாவில் நடத்தப்பட்டார் என்கிற செய்தியை ஜகதீஷ் தருகிறார்.

சுப்ரத பானர்ஜி சுவையான தகவலைத் தருகிறார். 1946ல் கட்சியில் சேர்ந்த போது , அலுவலகத்தில் ஜோஷி, ரணதிவே, டாங்கே இருந்தனர். ஜோஷியுடன் பழக்கம் , நெருக்கம் ஏற்பட்டது. கட்சியில் குழு இருப்பது தெரியாது. ரணதிவே 1948ல் ஜோஷி கோஷ்டி என அவரை நீக்கிவிட்டாராம்.

என்ன ஏது எனத் தெரியாத போதே நீக்கம் என பானர்ஜி சொல்கிறார். நாசிக் சிறையில் டாங்கேவிற்கு அடுத்த செல் பானர்ஜிக்கு. செல் கமிட்டி உருவாக்கப்பட்டு செயலராக்கப்படுகிறார் இளம் பானர்ஜி. அப்போது டாங்கே தைரியத்தை கொடுத்தாராம். Only one who does not do anything makes no mistakes என்கிற நம்பிக்கை கொடுத்தாராம்.

தலைமறைவு கட்சியோ சிறை அதிகாரியுடன் மோதலை செய்க என அறிவுரை செய்தது. டாங்கே சரியல்ல என்பாராம்.

கட்சி தோழர்களுக்கு மார்க்ஸின் காபிடலை அத்தியாயம் அத்தியாயமாக சிறையில் டாங்கே விளக்கி சொன்னதாக பானர்ஜி எழுதியுள்ளார்.

கட்சி லைன் பற்றி சில தோழர்கள் சிறையில் கேள்வி எழுப்பும்போது டாங்கே அமைதி காத்தாராம். வற்புறுத்திய போது பானர்ஜியிடம் அவர் தெரிவித்தாராம். நான் என் கருத்தை சிறையிலிருந்து சொன்னால் , கட்சி உடையலாம். தேவையில்லை என்றாராம். மே வ இதழ் ஒன்றில் ரவிந்திரநாத் தாகூரை கம்யூனிஸ்ட் தோழர் ரீஆக்ஷனரி என்று விமர்சித்ததைப் பார்த்து பானர்ஜி சிறையில் பொங்கியுள்ளார். பதில் எழுத வேண்டும் என்றார். அப்படியானால் நீ உன் கருத்தை பார்ட்டிக்கு எழுது என டாங்கே வழிகாட்டினாராம். சிறையில் தாகூரின் ஆக்கம் குறித்து டாங்கே தோழர்களுக்கு எடுத்துச் சொன்னாராம்.

பானர்ஜியை அவரது துணைவியார் கைக்குழந்தையுடன் சிறைச்சாலையில் பார்க்க வந்தபோது , டாங்கே துணவியார் உஷா தாய் உதவினார் என்பதையும் சொல்கிறார் பானர்ஜி. சிறையில் போலீஸ் துப்பாக்கி சூடு நடந்த போது அனைத்து தோழர்களின் காப்பை உறுதி செய்து பின்னர்தான் டாங்கேவும் பானர்ஜியும் செல் நுழைந்தனர். இரண்டு குண்டுகள் தாக்குதலிலிருந்து தப்பித்தார் நாசிக் சிறையில் டாங்கே என பானர்ஜி எழுதுகிறார். நீங்கள் இவ்வளவு ரிஸ்க் ஏன் எடுத்தீர்கள் எனக் கேட்டபோது டாங்கே சொன்னாராம்

I was trying to find out whether I had really become a coward and comfort living . பெரிய உள் சோதனையை டாங்கே செய்திருப்பதை, அவரது சொல்லும் செயலும் காட்டுகின்றன.

பம்பாயின் தொழிலாளிவர்க்கமும் கல்கத்தாவின் மத்தியதரவர்க்கமும் சேர்ந்துவிட்டால் இந்தியாவில் புரட்சி நடக்கும் பானர்ஜி என நம்பிக்கையை டாங்கே தெரிவித்தாராம்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் இரண்டறக் கலந்தவராக டாங்கே நல் வாழ்வு நடத்தி மே 22 1991ல் மறைந்தார். அவரை ஓரளவிற்கு இந்நூல் வழி அறிமுகம் செய்திட டாங்கேவின் 125ல் முயற்சி செய்துள்ளேன்.

30-10-2024

oct 30

முஷிரில் ஹாசன் தனது பெரும் உழைப்பில் உருவான நூலான Faith and Freedomத்தில் இறுதி அத்தியாயத்தை Bapu is finished- is he ? என வைத்திருப்பார்.

பக் 511ல் இந்த இயல் கீழ்கண்ட அழகான வரிகளுடன் முடியும்.

இரவு முடியப்போகிறது . ஏற்றிய விளக்கு அடித்துக்கொள்கிறது. காலைப்பொழுது எழுந்தவுடன் அந்த விளக்கு அணைந்துவிடலாம். ஆனாலும்

Kar - I duniya kaise tamam na kard

No one has ended the work of the world

எவ்வளவு அருமையான வரிகள் பாருங்கள். காந்தி உட்பட சிலர் இரவிற்கான வெளிச்ச விளக்கை ஏற்றி சென்றுள்ளார்கள் . ஆனால் உலகின் வேலை முடியவில்லை. நேருவோ, அம்பேத்கரோ, பெரியாரோ - மார்க்சோ லெனினோ மாவோவோ- இன்னும் எவரெவரோ - நீங்களும் நானுமோ இன்னும் பிறக்கப்போகும் நட்சத்திர மனிதரோ

No one has ended the work of the world

'ஓர் அடி ' என காந்தி தன்னால் ஆனதை எடுத்து வைத்தார். உலகில் வேலைகள் கடமைகள் முடியாமல் நீள்பாதையாக இருந்துகொண்டேயிருக்கிறது. சிறு சிறு வாகனங்கள் வழி மனிதர்கள் பயணம் செய்து நம்மை நாமே தீர்த்துக்கொள்கிறோம். தீரா உலகில் தீரும் மனிதராக...

30-10-2024